₹10

fmpb

# அறைகூவல்

Volume 53 | Issue 10 | October 2023

## தெரிந்துகொள்ளப்பட்டவர்களும்
# வஞ்சிக்கப்படலாம்




2023-ம் ஆண்டின் நோக்கம்



*ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.*
*– மத்தேயு 24:24*

# ஆரம்ப வரிகள்...



## ஜாக்கிரதை!

ஆங்கிலத்தில் டிரிப்ட் ''Drift'' என்ற வார்த்தையின் அர்த்தம் திரிதல், அல்லது மிதந்து செல்லுதல் ஆகும். கடல் பயணத்தில் திசைமாற்றி கருவியும் (Steering) மற்றும் ஒரு ஆற்றலின் பிறப்பிடம் (Source of power) மிக மிக அவசியம். இவ்விரண்டோடுங்கூட நங்கூரம் (Anchor) மற்றும் திசைகாட்டியும் (Compass) அவசியம் தேவை. இவை இரண்டும் நாம் செல்ல வேண்டிய திசையை நமக்கு காட்டும். நாம் தரித்திருக்க வேண்டிய இடங்களில் தரித்திருக்கவும் உதவும். இந்த திசைகாட்டியில் சிலவேளை சிறிய சிறிய மாற்றங்கள், அந்தக் கப்பலைச் சுற்றிய சூழ்நிலையினால் காற்று நீரோட்டங்களால் ஏற்படும். இதை அந்த மாலுமி கவனிக்கத் தவறினால் அந்தக் கப்பல் போக வேண்டிய திசையிலிருந்து சிறிது சிறிதாக வேறு திசையை நோக்கி பயணிக்க நேரிடும். இதைத்தான் சிறிதாகத் திரிதல் (drift) என்று குறிப்பிடுவர். எபிரெயர் 2:1-ல் "நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்" என்று எழுதப்பட்டிருக்கிறது. நம் கிறிஸ்தவ வாழ்விலும் நம்மை அறியாமலே பல கள்ளபோதகங்கள் மற்றும் கள்ளத்தீர்க்கத்தரிசிகளால் வஞ்சிக்கப்பட்டு கிறிஸ்துவை விட்டு வெகுதூரமாகச் சென்றிட நேரிடும். இந்நிலைமை தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கும் விதிவிலக்கு அல்ல என்று மத்தேயு 24:24-ல் வாசிக்கிறோம். சாத்தான் அவன் பொய்யின் பிதா, பொய்களைக் கவர்ச்சிகரமான வார்த்தைகளினால் ஜோடித்து (Sugar Coated Pills) மற்றும் போலியான மாம்சீகமானப் போதனைகளை அல்லது சூழ்நிலைகளை நமக்குக் கொடுக்கும்போது நாம் வஞ்சிக்கப்படுகிறோம். ஆதியாகமம் 3-ல் நம் ஆதித்தாயாகிய ஏவாளை மூன்று சூழ்ச்சிகளினால் சாத்தான் வஞ்சித்தான். ஆதியாகமம் 3:1-ல் "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" என்றது. முதலாவது, இங்கு தேவன் சொன்னதையே உண்மையா என்று கேள்விக்கேட்டு சந்தேகத்தை எழுப்பினான். இரண்டாவது ஆதியாகமம் 3:4 "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று தேவன் சொன்னதை அப்பட்டமாக மறுத்து பொய்யை மெய்யென நம்பவைத்தான். மூன்றாவது ஆதியாகமம் 3:5 "நீங்கள் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும்" என்று தேவனின் வார்த்தையைப் புரட்டிச் பொய்யான வாக்குத்தத்தங்களை வாரி வழங்குகிறான். ஆதியில் ஏதேன் தொடங்கி இந்நாள்வரை இந்த சூழ்ச்சியையே மனிதர்களிடம் பயன்படுத்த அதே சூழ்ச்சியால் அநேகரை வஞ்சிக்கிறதைப் பார்க்கிறோம். 1. தேவனின் உண்மையைச் சந்தேகிக்கச் செய்கிறான். 2. மறுக்கச் செய்கிறான் 3. திரிக்கச் செய்கிறான். இந்த வஞ்சனையிலிருந்து நாம் தப்பிக்கொள்ள தேவன் உண்மையாகவே அவருடைய வார்த்தையிலிருந்து என்ன சொல்லியிருக்கிறார் என்பதை நன்கு கற்று அறிந்திருத்தல் வேண்டும். அனுதினமும் அவருடைய வார்த்தையில் நிலைத்திருந்தால் மட்டுமே சாத்தான் எவ்வாறு உண்மையைத் திரிப்பான் என்று அறிந்து நாம் வஞ்சிக்கப்படாமலிருக்க முடியும்.

வஞ்சிக்கப்பட்டோர் வாழ்வில் பின் வரும் விளைவுகள் என்னவென்றால் ஆவிக்குரிய வாழ்வில் குருட்டுத்தன்மை, குழப்பம், தேவ வார்த்தையில் நம்பிக்கை இழத்தல், தார்மீக (Moral) மற்றும் கிறிஸ்தவ மதிப்பீடுகளிலிருந்து (Christian Values) நமக்கே தெரியாமல் சிறிது சிறிதாகத் திரிந்து உலகத்தோடு ஒத்துப்போய் விடுவோம். ஆகவே, இதிலிருந்து தப்பிக்க 3F வழிமுறையை நாம் பின்பற்றி வஞ்சிக்கப்படாமல் இருப்போம். தேவ வார்த்தையை அடித்தளமாகக் (Foundation) கொண்டு அதன் மேல் விசுவாசத்தை (Faith) வைத்து அதற்கு மேல் நம் உணர்வுகளை (Feelings) வைக்க வேண்டும். ஆனால் இன்று நாம் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு தேவ வார்த்தைக்கு நேர் எதிராக நம்மைச் செயல்படச் செய்கிறான். விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுவோம். இவ்வாறு சாத்தானின் வஞ்சனைக்கு நாம் எவ்விதத்திலும் நம்முடைய விசுவாசத்தை விட்டுக்கொடுக்காமல் விலைப்போகாமல் வாழ்ந்திடவும் அப்படி விலை போகும் கூட்டத்தை மீட்டிடவும் அழைக்கப்படுகிறோம்! வஞ்சிக்கப்படா வாழ்வையும், வழிவிலகா விசுவாசத்தையும் உடையவர்களாய் தேவவார்த்தையைக் கற்றறிந்து வஞ்சிக்கப்படாமல் ஜாக்கிரதையாய் வாழ்ந்திட தேவன் வேதவசனங்கள் மூலம் நம்மை எச்சரிக்கிறார். திருவசனத்தை வாஞ்சிப்போம், வஞ்சிக்கபடாதிருப்போம்!

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.** – *2 கொரிந்தியர் 11:3*

**பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட இயேசு கிறிஸ்து தேவையில்லை என்று மக்களை நம்ப வைப்பது சாத்தானின் மிகப்பெரிய வஞ்சனைகளில் ஒன்றாகும். பிசாசினால் வஞ்சிக்கப்படாதீர்கள். இந்த மாபெரும் வஞ்சனையில் விழுந்துவிட வேண்டாம். நீங்கள் இப்பொழுது வரை கிறிஸ்துவினண்டை வரவில்லை என்றால் கிறிஸ்துவை நம்பி அவர் அண்டை வாருங்கள்.**
– *மார்க் ஹிட்க்காக்*

**எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.**
– *2 தெசலோனிக்கேயர் 2:3*

**நீங்கள் கவனமாக இல்லாவிட்டால் உண்மையில் பிசாசின் கைக்கூலி ஆவீர்கள். அவன் வல்லமையுள்ளவனும் தந்திரமுள்ளவனுமாவான்**
– *பில்லி கிரகாம்*


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# பொதுச்செயலாளரிடமிருந்து...



சந்திக்கப்படாத இந்தியர்களைச் சந்திக்கும் பணியில் அன்பான பங்காளர்களே,

எல்லா நாமங்களுக்கும் மேலான நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

அக்டோபர் மாத அறைகூவல் இதழ் மத்தேயு 24:24-ன் அடிப்படையில் 'தெரிந்தெடுக்கப்பட்டவர்களும் வஞ்சிக்கப் படலாம்' என்ற தலைப்பில் வெளியிடப் படுகிறது. இந்த வசனத்தின்படி தெரிந்தெடுக்கப் பட்டவர்கள் கள்ளக்கிறிஸ்துக்கள், கள்ளத் தீர்க்கதரிசிகள், பெரிய அடையாளங்கள் மற்றும் அதிசயங்கள் மூலம் வஞ்சிக்கப் படலாம். செப்டம்பர் 15 அன்று எனது காலை தியானத்தில், யோவான் 15:2-ம் வசனத்தை நான் தியானித்தபோது, 'தெரிந்தெடுக்கப்பட்டவர்களும் வஞ்சிக்கப் படலாம்' என்ற தலைப்புடன் இதை இணைக்க முடிந்தது. இந்த வசனம் கூறுகிறது, **"என்னில்** கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்;..." எனவே அவரில் இருப்பதினால் மாத்திரம் நம் வாழ்வு கனி தரும் என்பதற்கு எந்த உத்திரவாதமு மில்லை. சிலர் நம் 'இருப்பு' (being) தான் முக்கியம் என்றும், 'செயல்' (doing) முக்கியமில்லை என்றும் வலியுறுத்துவதால் நாம் வஞ்சிக்கப்பட வேண்டாம். தேவன், நம் இருப்புக்கும், செயலுக்கும் சமமான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார். நம்முடைய வாசகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரும் கர்த்தருக்காக அதிக கனியைக் கொடுக்கவும், யோவான் 15:8-ன்படி, நாம் கிறிஸ்துவின் சீஷர்கள் என்பதை நிரூபிக்கவும் கர்த்தர் உதவுவாராக.

**மத்திய மண்டல மிஷனரிகளுக்கானக் கலாச்சாரம் கடந்தத் தொடர்புக் கூட்டம்:** மகாராஷ்டிரா மாநிலம் தலோதாவில் 40 மத்திய மண்டல மிஷனரிகளுக்கு ஆகஸ்ட் 21 முதல் 25 வரை இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது. இந்த முக்கியமான பயிற்சியில் ஒவ்வொரு மக்கள் குழுக்களிலிருந்தும் வந்த மொழி உதவியாளர்கள் முக்கியமான கலாச்சாரத் தரவுகளைச் சேகரிக்க மிஷனரிகளுக்கு உதவினார்கள்.

**ஐ.எம்.ஏ. (IMA) உச்சி மாநாடு:** ஆகஸ்ட் 28 முதல் 31 வரை நாக்பூரில் இந்திய மிஷனரி இயக்கங்களின் கூட்டமைப்பு மூலம் நாக்பூரில் தேசிய தலைவர்கள் உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. தினசரி வேதாகமப் பயிற்சிகள், திட்டமிடல் அமர்வுகள் மற்றும் குழு கலந்துரையாடல் நடத்தப்பட்டன. மற்றும் மாநாட்டின் இறுதி நாளில் தீர்மான அறிக்கை வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஃபோக்டியில் திருப்பணிக்கான அருட் பொழிவு:** வட இந்திய திருச்சபை, குஜராத் மறைமாவட்டத்தின் பேராயர் அருட்பெருந்திரு. சில்வான்ஸ் S. கிறிஸ்டியன் அவர்கள் செப்டம்பர் 2, 2023 அன்று, குஜராத் மாநிலத்தில் ஃபோக்டியிலுள்ள நமது பயிற்சி மையத்தில் சபை தலைவர்கள் மற்றும் பிற ஊழிய ஸ்தாபனத் தலைவர்கள் முன்னிலையில் நடைபெற்ற திருப் பணிக்கான அருட்பொழிவு ஆராதனையில், 30 ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் டீக்கன்களாக அருட்பொழிவு செய்யப்பட்டனர். அந்த நிகழ்வு மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது, அந்த நாள், அருட்பொழிவு தினமாக மட்டுமல்லாமல் பேராயர் அவர்கள் அப்பொறுப்பில் 11 ஆண்டுகள் நிறைவுச் செய்த சிறப்பான நாளாகவும் இருந்தது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, தேவராஜ்ய விரிவாக்கப்பணியில் குஜராத் பேராயத்தின் ஆதரவிற்காக நன்றி தெரிவிக்கின்றது. அந்நிகழ்வைப் பற்றிய விரிவான அறிக்கையை உள்பக்கங்களில் காணலாம்.

**முக்கியக் கூட்டங்கள்:** நிர்வாக விவகாரங்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுப்பதற்காக

நிர்வாகக் குழு சென்னையில் செப்டம்பர் 7, 8 ஆகிய தேதிகளில் கூடியது. நிதிக் கண்காணிப்புக் குழு செப்டம்பர் 9-ம் தேதி சென்னையில் நேரில் கூடியது. தேவன் இரு கூடுகைகளையும் ஆசீர்வதித்தார்.

**கோலார் மற்றும் ஹுப்ளி பணித்தளப் பயணம்:** செப்டம்பர் 14 முதல் 18 வரை நான் கர்நாடகா மாநிலத்தில், கோலார் மற்றும் ஹுப்ளி பிராந்தியங்களிலுள்ளப் பணித்தளங்களைப் பார்வையிட்டேன். சில ஆண்டுகளாக ஊழியத்திற்கு அதிகமான எதிர்ப்புகள் இருந்தபோதும் நமது ஊழியர்கள் தைரியமாகவும், அர்ப்பணிப்போடும் ஊழியத்தைச் செய்வதற்கு தேவன் பாராட்டிய கிருபைக்காக தேவனைத் துதிப்போம். தற்போது அந்தச் சூழ்நிலையை ஊழியத் திற்குச் சாதகமாக தேவன் மாற்றியமைத் திருக்கிறார். உங்கள் ஜெபங்களில் அனைத்து ஊழியர்களையும் நினைவு கூருங்கள்.

**அக்டோபர் 2023 நிகழ்ச்சிகளுக்காக உங்கள் அன்பான ஜெபங்களை நான் நாடுகிறேன்.**

**தேசிய ஊழியர்கள் மாநாடு:** இதைப் படிக்கும்போது, நண்பர் சுவிசேஷ ஜெபக்குவின் முக்கியமான நிகழ்வான தேசிய ஊழியர்கள் மாநாடு செப்.30 முதல் அக்.2 வரை நடந்துகொண்டிருக்கிறது. இந்தக் கூடுகைக்கான உங்கள் ஊக்கமான ஜெபங்களுக்கும், ஆதரவிற்கும் எனது நன்றிகள். கூட்டம் முடிவடைந்தாலும், கூட்டத்தில் பேசப்படும் தேவவார்த்தை ஊழியர் களைப் பலப்படுத்தவும் உற்சாகப்படுத்தவும், அவர்களின் இதயங்களில் நிலைத்திருக்கவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

**டெக்கான் பிராந்தியப் பணித்தள விஜயம்:** தேவனுக்குச் சித்தமானால் அக்.7 முதல் 9 வரை டெக்கான் பிராந்திய மிஷனரிகளைச் சந்திக்க திட்டமிட்டுள்ளேன்.

**ஜம்மு மாநாடு:** ஜம்மு பிராந்திய மாநாடு அக்.14 முதல் 16 வரை திட்டமிடப்பட்டுள்ளது. விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக இம்மாநாடு அமைதியானச் சூழ்நிலையில் நடைபெற தயவாய் ஜெபியுங்கள்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு US இணையவழி மாநாடு:** அமெரிக்காவிலுள்ள இந்திய வம்சாவளி ஆதரவாளர்கள் மற்றும் ஜெபவீரர்களுக்காக அக்.14-ம் தேதி ஒரு இணையவழி மாநாடு நடக்கவிருப்பதால் அதில் எந்தவொரு தொழில்நுட்பக் குறைபாடு களுமில்லாமல் மாநாடு நன்றாக நடத்தப்பட வேண்டும் என்று ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**தேசிய மிஷனரிகள் பயிற்சி மையத்தில் கற்பித்தல் மற்றும் பட்டமளிப்பு விழா:** தேவனுக்குச் சித்தமானால் நான் அக்டோபர் இறுதி வாரத்தில் ஜான்சி தேசிய ஊழியர்கள் பயிற்சி மையத்தில் 10 மாத ஊழியர் பயிற்சி பெறும் ஊழியர்களுக்கு "கலாச்சாரம் கடந்தத் தொடர்பு" என்ற தலைப்பின் கீழ் கற்றுக்கொடுக்கவிருக்கிறேன். அக்.29 அன்று மிஷனரிகளில் 11 பேர் பயிற்சியை வெற்றி கரமாக முடித்து பட்டம் பெறவிருக்கிறார்கள்.

**மணிப்பூருக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்:** மணிப்பூரின் அமைதிக்காகவும் தேவப் பிள்ளைகளுக்காகவும் பல ஜெபவீரர்கள் ஜெபத்தில் மன்றாடுகிறார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். நிலைமை இன்னும் மோசமாக இருப்பதால், உங்கள் தொடர்ச்சியான மற்றும் ஆர்வமுள்ள ஜெபங்கள் தேவைப்படுகிறது. தயவுகூர்ந்து உங்கள் ஜெபங்களில் ஒவ்வொரு நாளும் துன்பத்திலுள்ள மக்களை நினைவு கூருங்கள்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இயக்கத்திற்கான உங்கள் ஜெபங்கள் மற்றும் ஆதரவுக்காக உங்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊழியங்கள் மற்றும் ஊழியர்கள், ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்கள் யாவரையும் உங்கள் ஜெபங்களில் நினைவு கூருங்கள் உங்களுக்காக நாங்களும் ஜெபிக்கிறோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**



# தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படலாம்!

நாம் ஒரு அருமையான தலைப்பில் ''நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்" என்ற பதத்தை பல்வேறு தலைப்பின் கீழ் ஆழமாகத் தியானித்துக் கொண்டிருக்கிறோம். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய நாம், கடந்த மாதம் நடந்த தேசிய ஊழியர்கள் மாநாட்டிலும் இத்தலைப்பின் கீழ் தியானிக்கவும், கற்றுக்கொள்ளவும் தேவன் கிருபைச் செய்தார். 2தெச.2:13-ல் ''ஆதி முதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே" என்றுக் கூறப்பட்டுள்ளபடி நாம் தேவனாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்தான் என்பதே ஓர் மகத்தான உண்மையாகும். இது ஒரு தற்செயலான செயலல்ல; நாம் ஆதியிலே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.

இந்த மாதம் நாம் "தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கூட வஞ்சிக்கப் படுதல்" என்ற தலைப்பின் அடிப்படையில் நாம் அறிந்துக் கொள்ளப் போகிறோம். மத்தேயு 24:24-ன்படி "கூடுமானால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்." நாம் பொல்லாத கடைசி நாட்களில் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறோம். குறிப்பாக, ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஏமாற்றப் படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாட்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மிகவும் எளிதாக வஞ்சிக்கப்படுவார்கள். பேதுரு அப்போஸ்தலன் தன் கடிதத்தில், "சாத்தான் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீது ஒரு கண் வைத்து அவர்களை விழுங்க வகைத் தேடுகிறான்'' என எழுதுகிறார். "வஞ்சிக்கப்படுதல்" என்பது ஒரு மௌனமான கொலையாளி. ஏனெனில், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கூட உண்மை தேவனின் வழியை விட்டு தங்களுக்குள் எது சரி மற்றும் எது உண்மை வழி என தோன்றுவதைப் பின்பற்றுகிறார்கள்.

## வஞ்சிக்கப்படுதலுக்கு சாத்தியமான ஆபத்துக்கள்:

"கள்ளக்கிறிஸ்துக்கள் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்பி அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வார்கள்." என்று மத்தேயு 24:24-ல் கூறப்பட்டிருக் கிறது அப்படிப்பட்டவர்களின் பண்புகள் யாதெனில் அவர்கள் ஆழமான சத்தியங் களை வெறுப்பவர்கள், வாதங்களையும், தர்க்கங்களையும் யோசித்துக்கொண்டு இருப்பவர்கள், ஒழுங்கற்ற வாழ்க்கை நடைமுறையும், மாயமான தாழ்மையும் உடையவர்கள் என்று கொலோ.2:19-ல் அப்படிப்பட்டவர்களைக் குறித்து பவுலும், திமோதேயுவும் 'வஞ்சியாதிருக்கப்

பாருங்கள்' என்று விசுவாசிகளுக்கும், பரிசுத்தவான்களுமாகிய கொலோசே பட்டணத்து சகோதரர்களுக்கு எழுதினார்கள்.

## பொய்யான ஆன்மீகம்:

சமீப காலங்களில் உண்மையான ஆன்மீகம் தொலைந்துவிட்டது. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் உண்மையான அர்ப்பணிப்பு இல்லாமல், பெயரளவு கிறிஸ்தவத்திற்கும், பகட்டு மற்றும் தவறான கிறிஸ்தவ மதிப்பிற்கும் அடிமை யாகி தேவையற்ற நடவடிக்கைகளில் மன அழுத்தத்துடன் கூட்டம் கூட்டமாக விழுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை இயேசு "குருடரான வழிகாட்டிகள்" என எச்சரிக்கிறார். அவர்களின் நடவடிக்கைகள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கவர்ச்சியாய் ஏமாற்றி மாய்மாலத்திற்குள் வழிநடத்துகிறது. இதுவே பாவத்தின் உச்சகட்டமாகும். இதற்கு அருமை யான ஓர் எடுத்துக்காட்டு அனனியாவும் சப்பீராளும் தான். பர்னபாவின் நிலம் விற்கப்பட்டு, அதன் தொகையை அப்போஸ்தலர் பாதத்தில் வைத்ததையும் அதனால் அவருக்கு இருந்த புகழையும் இவர்கள் கண்டார்கள். அதனால் இவர்கள் தங்கள் நிலத்தையும் விற்று, வஞ்சித்து, கொஞ்சம் பணத்தையும் தங்களுக்கென்று வைத்துக்கொண்டு, மீதிப் பணத்தை அப்போஸ்தலரின் பாதத்தில் வைத்தார்கள். அவர்களுக்கு உண்மையும் வெளிப்படைத் தன்மையையும் விட, பெயரும், புகழும் பெரிதாகத் தோன்றியது, அவர்கள் பொய்க் கூறி உண்மைத் தன்மையை மறைத்தனர். தேவன் உண்மைத் தன்மையை நம் இருதயங்களில் எதிர்ப் பார்க்கிறார். தேவன் மனுஷனால் ஏமாறு கிறவரல்லவே; ஏனென்றால் அவர் நியாயாதிபதி. நியாயத்தீர்ப்பின் நாளன்று அவர் சந்நிதானத்தில் நிற்கப்போகிறோம். அந்நாள் வெகு சீக்கிரத்தில் வரவிருக்கிறது. அனனியா, சப்பீராள் பொய் கூறிவிட்டு, சதாரண அப்போஸ்தலரான பேதுருவிற்கு முன் நிற்க முடியவில்லை என்பதை நம் மனதில் கொள்ளவேண்டும். போலி ஆன்மீகத்திலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளத் தெளிந்த மற்றும் உண்மையான மனசாட்சி நமக்கு அவசியம்.

## கனியற்ற கிறிஸ்தவர்கள்:

ஒரு உண்மை கிறிஸ்தவனின் வாழ்க்கை என்பது அவனது ஆவியின் கனியினால் அறியப்படும். வஞ்சிக்கப்பட்டவர்கள் ஆவியின் கனியைப் ஒரு பொருட்டாக கருதமாட்டார்கள். புகழோடு வாழ்வது அவர்களின் குறிக்கோளாகும். ஆவியின் கனியால் நிறைந்த ஒரு மனிதன் தாழ்மை, அன்பு, சாந்தம், பொறுமை மற்றும் தெய்வீகப் பண்புகளுடன் காணப்படுவான். கிறிஸ்தவம் என்பது ஒரு சில சட்டத் திட்டங் களைப் பின்பற்றுவது அல்ல மாறாக, ஆண்டவரோடு அன்பின் ஐக்கியத்தில் உறவு கொண்டிருப்பதேயாகும். இக்கால கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வரங்களுக்கு நேராக ஈர்க்கப்படுகிறார்கள். அது தேவைதான் ஆனால் முதலும், முக்கியமுமானதும் ஆவியின் கனிதான். கலா.5-ம் அத்தியாயத்தில் ஆவியின் கனியைப் பற்றியத் தெளிவான விளக்கம் கூறப்பட்டுள்ளது. அது இல்லாவிட்டால் பரிசுத்த ஆவியின் வரங்களான, தீர்க்க தரிசனம், அந்நிய பாஷை பேசுதல், இரகசியங்களை அறிதல், மலைகளைப் பெயர்க்கும் விசுவாசம், நமக்கு உண்டான அனைத்தையும் ஏழைக்குக் கொடுத்தல் (1கொரி.12-ம் அத்தியாயத்தில்) போன்றவைகளால் எந்தவிதமான பலனு

மளிக்கப்போவதில்லை. நாம் ஆவியின் கனியை நம் வாழ்வில் பெற்று, இயேசுவை நம் வார்த்தையிலும், செயலிலும் மற்றும் நம் வாழ்விலும் பிரதிபலிக்கும்படி வாழ்கிறோமா?

## முட்டாள்தனமான விவாதங்கள்:

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் முட்டாள் தனமான விவாதங்களால் வஞ்சிக்கப் பட்டு வேதத்திற்குப் புறம்பான கொள்கை களுக்குத் துணைபோய் விடுகின்றனர். கொள்கைகளால் முடிவைப் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட எண்ணமும், சிந்தையும் உடையவர்கள் தங்களை உன்னத ஆன்மீகவாதிகளாய் எண்ணிக்கொண்டு உண்மையான சத்தியத்தைக் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். 2தீமோ.4:3, 4-ல் கூறப்பட்டபடி, “ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.”

மேலும் ஒரு முக்கியமான பார்வை, யூதாஸ் ஸ்காரியோத் வாழ்க்கையாகும். வேதத்தில் யோவான் 6:70-ல் இயேசு இவ்வாறு கூறுகிறார் “...பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து கொள்ள வில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார்.” தெரிந்துகொள்ளப்பட்டவன் பிசாசானான். ஒரு அப்போஸ்தலன் பிசாசாகினான். இந்த முழு அத்தியாயத்திலும் இயேசு கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்ட யூதர்களின் மனப்பான்மையை அறிந்துக் கொள்ளலாம்.

*யோவான் 6:41 - யூதர்கள் முறுமுறுத்தார்கள்*

*யோவான் 6:52 - யூதர்கள் தங்களுக் குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்*

*யோவான் 6:60 - “இது கடினமான உபதேசம் யார் கேட்பார்கள்” என்று சீஷர்களில் அநேகர் முறுமுறுத்தார்கள். கருதினார்கள்*

*யோவான் 6:61 - ‘இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ?” என இயேசு கேட்டார்*

*யோவான் 6:66 - “அவருடைய சீஷர்களில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்.”*

*யோவான் 6:67 - “நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?”*

மேலே கூறப்பட்ட சூழ்நிலையின்படி, யூதாஸ் ஒரு பிசாசு என்றும் அந்த பிசாசு நினைத்துக் கூட பார்க்க முடியாத அருவருப்பான ஆவிக்குரிய வஞ்சிக்கப்பட்ட சீஷன். இயேசுவின் மந்தையில் இருப்பதால் மாத்திரம் எந்த பயனுமில்லை. அவருடைய போதனைகளை ஏற்று, கீழ்ப்படிவது மிக அவசியம். அது ஆவிக்குரிய வாழ்க்கைப் பாதையில் பாதுகாப்பாய் பயணிக்கத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். யூதாஸ் இயேசுவின் மந்தையில் இருந்தாலும் அவருக்கு எதிராக வஞ்சனையானக் காரியங்களைச் செய்துக்கொண்டிருந்தான். யூதாஸ் தன் வாழ்வில் இயேசு வின் எச்சரிக்கையை அலட்சியப்படுத் தினதால் பிசாசுக்கு இடங்கொடுத்தான். நீதி.29:1 “அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்” எனக் கூறப்பட்டுள்ளது.

நாம் எவ்வாறு வஞ்சகங்களுக்குத் தப்பலாம்? இந்தக் கடைசி நாட்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் எளிதாக வஞ்சிக்கப்படுகிறார்களே. 2 தீமோ.3: 2-5 -ல் கடைசிக் காலத்தில் காணப்படுகிற கிட்டத்தட்ட இருபது பாவங்களைக் குறித்துப் பட்டியலிடப்பட்டுள்ளது. "தேவபக்தியின் வேஷத்தைத்தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" என்றுத் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

1. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தங்கள் ஐக்கியம் மற்றும் கொள்கைகள் குறித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

2. நாம் கள்ளப் போதகர்களுக்கும் மற்றும் கள்ள உபதேசங்களிலிருந்தும் தப்ப முறையான வேதவாசிப்பு அவசியம்.

3. ஒழுங்கற்று நடக்கும் மக்களிடமிருந்து நாம் விலக வேண்டும்.

4. நன்மை தீமை எது என அறியும் பரிசுத்த ஆவி நமக்கு வேண்டும். அவற்றை அவர்கள் ஆவியின் கனியினால் அறியலாம்.

5. மனுஷர்களைப் பிரியப்படுத்தாமல் கர்த்தரை எல்லா வழிகளிலும் பிரியப்படுத்த வேண்டும்.

6. ஆவியின் கனியைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிக்க வேண்டும்.

7. நம்முடைய காலை நேர தனிமை யான ஜெபத்திற்குத் தொந்தரவு செய்கிற அனைத்தையும் விட்டுவிட வேண்டும்.

8. உலகியல் மற்றும் கபடம் போன்றவை வஞ்சகத்தின் ஆபத்தான அடையாளங்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எச்சரிக்கை யாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும். 1கொரி.10:12 "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கக்கடவன்.'

**- திருமதி. விஜயமலர் குருபாதம்**
(ஓய்வுப் பெற்ற ஊழியர்)



## மிஷனரிப் பிரதிஷ்டை

உடுமலைப்பேட்டை பிராந்தியம், மடத்துக்குளம் தாலுகாவில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் மிஷனரிப் பிரதிஷ்டை ஆராதனையை 30.07.2023 அன்று கணியூர், பவர் பிரேயர் அசெம்பிளி திருச்சபையில் வைத்து நடத்த தேவன் கிருபைச் செய்தார். ஜார்க்கண்ட் மாநிலம் ஜெகநாத் பணித்தளத்தில் பணி செய்யும் நமது மிஷனரி திரு. S. ஆபிரகாம் அவர்கள் இத்திருச்சபையில் பிரதிஷ்டைச் செய்யப்பட்டார். இவரை பவர் பிரேயர் அசெம்பிளி திருச்சபையின் போதகர். சாமுவேல் அமிர்தராஜ் மற்றும் திருச்சபையின் மக்கள் இணைந்து தாங்குகின்றனர். தேவகிருபையால் இப்பிரதிஷ்டை ஆராதனையை அருட்திரு. பால்ராஜ் மற்றும் அருட்திரு. ஜாண் சாமுவேல் ஆகியோர் சிறப்பாக நடத்தி தந்தனர். இந்தப் பிரதிஷ்டை ஆராதனையைச் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்த உடுமலைப்பேட்டை கௌரவ முன்னேற்ற செயலர் திரு. சாமுவேல் விக்டர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து ஜெபக்குழுத்தலைவர்களுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# திருப்பணிக்கான அருட்பொழிவு





அன்பான இறைமக்களே,

இந்தியா பலவித மொழிகள் மற்றும் கலாச்சாரங்களை உள்ளடக்கிய பல்வேறு பிராந்தியங்களின் தொகுப்பு கல்வி மருத்துவம், சுகாதார வசதிகள் அற்ற நிலையில் இன்றும் பல இனங்கள் மலைகளிலும் காடுகளிலும் வாழுகின்றனர். மூட நம்பிக்கைகள் நிறைந்த இவர்கள் வாழ்வில் இறைவன் இயேசுவின் அன்பை விதைக்கும் பணியில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியர்களாக தேவ ஊழியத்தைச் செய்து வருகின்றோம். இதன் பலனாக ஏராளமான திருச்சபைகள் வட இந்தியாவில் உருவாகியுள்ளது. திருச்சபையின் அருட்சாதனமாகிய திருமுழுக்கு, திருவிருந்து ஆகியவை அளிப்பதற்கு அருட்பொழிவு பெற்ற ஊழியர்களின் தேவை எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

கடந்த 2023 செப்டம்பர் 2-ம் தேதி குஜராத்தில் நேத்ரங் எனும் பகுதியில் உள்ள நமது ஸ்தாபன சிற்றாலயத்தில் வைத்து வட இந்திய திருச்சபை பேராய தந்தை அருட்பெருந்திரு. சில்வான்ஸ் S. கிறிஸ்டியன் அவர்கள் நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 29 ஊழியர்களுக்கு அருட்பொழிவு வழங்கினார்.

விந்தியா சாத்புரா மலைநடுவில் ஓடும் நர்மதா நதி போல வட இந்திய திருச்சபை மற்றும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நடுவே திருப்பணியில் ஐக்கியம் நதிபோல சீராகப் பயணித்து வருகிறது.

நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு பொது செயலாளர் அருட்திரு. ஜாண் பெர்லின், பணித்தள செயலாளர் அருட்திரு. சாலமோன் ஞானசேகர், குஜராத் மாவட்ட பொறுப்பாளர் அருட்திரு. ஐசக் ராஜாவுடன் இணைந்து மூத்த ஊழியர்கள் அருட்திரு. ஜோசப் மற்றும் அருட்திரு. ரூபன் ஆகியோர் முன்வந்து அருட்பெருந்திரு. சில்வான்ஸ் S. கிறிஸ்டியன் அவர்களையும், அவர்களோடு வந்த திருமண்டில பொருளாளர், திருமண்டில செயலாளர் மற்றும் திருமண்டில பொருளாளர் ஆகியோரை பூங்கொத்து

கொடுத்து வரவேற்க, கிளிப்பனி சபையின் இறைமக்கள் இசையுடன் கூடிய நடனங்களை ஆடி கர்த்தரை மகிமைப்படுத்தினர்.

மிஷனரி அருட்பொழிவு ஆராதனைச் சிறப்பாக நடைப்பெற்றது. அருட்பொழிவு பெற ஆயத்தமாக இருந்த 29 நபர்களும் பேராயரின் பின்னால் பவனியாக சிற்றாலயத்தில் சென்று தமக்குரிய இருக்கையில் நின்று வாக்குப்பிரமாணங்களைப் படித்து, பேராயரால் குருத்துவ ஊழியத்திற்கு அபிஷேகிக்கப்பட்டனர். பேராயர் அவர்கள் அருட்பொழிவு பெற்ற ஆயர்களை ஆசீர்வதித்து அவர்கள் குருத்துவப் பணிவிடைக்குரிய அலங்காரத்தையும் திருமறையையும் வழங்கினார். அருட்பொழிவு ஆராதனையில் நமது பொது செயலாளர் ஆண்டவருடைய வார்த்தைகளைப் பகிர்ந்தார். ஊழியத்தில் தேவைப்படும் அர்ப்பணிப்புக் குறித்தும் இயேசுவின் ஊழிய முன்மாதிரியை எந்தவித சமரசமுமின்றி நேர்மையாகச் செய்ய வேண்டிய தற்கால அவசியத்தைக் குறித்தும் தெளிவுடன் போதித்தார்.

அருட்பொழிவு ஆராதனை நடந்த நாள் - நமது வட இந்திய திருச்சபை பேராயர் அருட்பெருந்திரு. சில்வான்ஸ் S. கிறிஸ்டியன் அவர்களுக்கு 12-வது அருட்பொழிவு தினமாகும். மகிழ்ச்சியின் அடையாளமாக கேக் வெட்டப்பட்டது. மேலும் பேராயர் அவர்கள் சிறப்பு பாடல் ஒன்றை இயற்றி இசை அமைத்து ஆராதனையில் பாடி தேவனுக்கு நன்றி பலிச் செலுத்தும் வேளையில் நாங்களும் தேவனைத் துதித்தோம்.

# ஆலயப் பிரதிஷ்டைகள்



ஜார்க்கண்ட் மாநிலம், பாகூர் மாவட்டம், கடக்கரம்மு என்ற இடத்தில் தேவ நாம மகிமைக்கென்று, இடையன்குடி என்ற ஊரிலிருந்து திரு. N. டேவிட் அவர்களின் அன்பு மனைவி திருமதி. ஹேமலா டேவிட் அவர்களின் நினைவாக ஆலயம் கட்ட காணிக்கைக் கொடுத்து, ஆலயம் கட்டி முடித்து, 30.07.2023 அன்று ஆலயம் பிரதிஷ்டைச் செய்யப்பட்டது. இந்த குடும்பத்தாருக்கு நன்றி கூறி தேவனைத் துதிப்போம்.

– **திரு. செல்வராஜ்,** கௌரவ விரிவுப்பணி செயலர் - மத்திய நெல்லை.



தர்மபுரி மாவட்டம், இந்தூர் பணித்தளத்தில் தேவ நாம மகிமைக்கென்று கடந்த 27.08.2023 அன்று ஒரு ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வாலய மங்கலப்படைப்பிற்கு கோயம்புத்தூரிலுள்ள சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த விரிவுப்பணி தலைவர்கள் 10 பேர் கொண்ட குழுவினர் வந்து சிறப்பித்தனர்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**எஸ். ஏ. கிறிஸ்டோபர்**

19.10.1947 - 18.08.2023

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஓய்வு பெற்ற மிஷனரி அருட்திரு. எஸ். ஆபிரகாம் கிறிஸ்டோபர், 2023 ஆகஸ்ட் 18-ம் தேதி அன்று தனது 76-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். கலாச்சாரம் கடந்த மிஷனரியாக ராஜஸ்தானிலும், சென்னை குடிசைவாழ் மக்கள் மத்தியிலும் சுவிசேஷப்பணி செய்து அன்னை சத்யா நகரில் திருச்சபை ஒன்றை நிறுவினார்.

அருட்திரு. ஆபிரகாம் கிறிஸ்டோபர் 1947-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் நாள் கிறிஸ்டியான்நகரம் அருகிலுள்ள மாதவன் குறிச்சி, என்ற கிராமத்திலுள்ள ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை திரு. சுவாமிநாதன், தாயார் திருமதி. அன்னா நாக ரத்தினம். இவரது தந்தை ஒரு ஆசிரியராகவும், உள்ளூர் திருச்சபையின் உபதேசியாராகவும் இருந்தார். அருட்திரு. கிறிஸ்டோபருக்கு மூன்று சகோதரிகளும், ஒரு தம்பியும் இருந்தனர்.

1966-ம் ஆண்டில் அவருக்கு 16 வயதாக இருந்தபோது, கிறிஸ்துவுக்காக இளைஞர் இயக்கம் நடத்திய இளைஞர் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. வேதவசனம் 1 கொரிந்தியர் 5:17 மூலம் இவர் கிறிஸ்துவில் புது சிருஷ்டியாக மாறினார். அன்றிலிருந்து இவர் வேதத்தைக் கிரமமாகப் படிக்கவும், தியானிக்கவும், தவறாமல் ஜெபிக்கவும் தொடங்கினார். இது கர்த்தரில் வளர இவருக்கு உதவியது.

1967-ம் ஆண்டு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு பண்ணைவிளையில் நடத்திய கிதியோனியர் முகாமில் கலந்து கொண்டார். அங்கு இவர் கலாச்சாரம் கடந்து செல்லும் மிஷனரியாக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். இதற்கிடையில் சென்னை சாந்தோமிலுள்ள சி.எஸ்.ஐ. காது கேளாதோர் பள்ளியில் காப்பாளராகச் சேர்ந்தார். மெட்ராஸ் பைபிள் லீக் உடன் சேர்ந்து கிராம மக்களிடையே ஊழியம் செய்து வந்தார்.

ஆண்டவரின் வழிகாட்டுதலின்படி, 1976-ம் ஆண்டு, ஆகஸ்ட் 1-ம் தேதி நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முழுநேர ஊழியராகச் சேர்ந்தார். பயிற்சிக்குப் பிறகு இவர் ராஜஸ்தானுக்கு அனுப்பப்பட்டார். அங்கு ஹனுமான்கட் என்ற பணித்தளத்தை மைய மாகக் கொண்டு ஊழியத்தைத் தொடங்கினார். வட இந்தியாவின் பணிகளுக்குப் பிறகு, சென்னைக்கு வந்து குடிசைவாழ் மக்கள் மத்தி யில் ஊழியம் செய்தார். 2005-ம் ஆண்டில், கிழக்கு இமயமலை திருமண்டலம் இவருக்கு குருத்துவப்பட்டம் கொடுத்தது. 36 ஆண்டுகள் ஊழியத்தை நிறைவேற்றி, 31.12.2012-ல் பணி ஓய்வு பெற்றார்.

இவர் திருமதி. ஞானம்மாள் என்பவரை 11.02.1982-ல் மணந்தார். இவர்களை தேவன் ஆசீர்வதித்து மூன்று மகன்களைக் கொடுத்தார். மூத்த மகன் திரு. சார்லஸ் மோசஸ் ஜேசுதாஸ் ஒரு IT நிறுவனத்தில் வேலைச் செய்து திருமணமாகி சென்னையில் வாழ்ந்து வருகிறார். இரண்டாவது மகன் ஆரோன் வெஸ்லி கால்நடை மருத்துவராக உள்ளார். மூன்றாவது மகன் டிக்சன் லிவிங்ஸ்டன் எம்.பி.ஏ., முடித்துவிட்டு திருமண மாகி சென்னையில் தனியார் வங்கியில் வேலை பார்த்து வருகிறார். ஆண்டவருடைய மகிமைக்காக தனது ஓட்டத்தைச் சிறப்பாக ஓடி முடித்த அருட்திரு. எஸ்.ஏ. கிறிஸ்டோபர் அண்ணனின் நல் வாழ்விற்காக தேவனை துதித்து, அவர் விட்டுச்சென்றுள்ள குடும்ப அங்கத்தினர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**– அருட்திரு. அறிவர். E. ராஜன்**

# மிஷனரிப் பிரதிஷ்டை



தேவனுடைய மாபெரும் கிருபை, நீண்ட நாட்கள் ஜெபம், பிரயாசத்தின் அடிப்படையில் கடந்த 2000-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி பாளையங்கோட்டை தூய திரித்துவ பேராலயத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் 36 மிஷனரிகளைப் பிரதிஷ்டை செய்து வட இந்திய மாநிலங்களுக்கு அனுப்பி வைக்க தேவன் உதவி செய்தார். நெல்லை திருமண்டலம், திருநெல்வேலி பேரருட்திரு. ஜெயபால் டேவிட் பேராயர், அவர்கள் மிஷனரிகளைப் பிரதிஷ்டைச் செய்து, சவாலான செய்தியையும் கொடுத்து ஆசீர்வதித்தார்கள்.

அதன் பின் ஏறக்குறைய 23 ஆண்டுகளுக்குப் பின் தேவனுடைய கிருபையினால் கடந்த 2023 ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி மாலை 6 மணிக்கு தூய திரித்துவப் பேராலயம், பாளையங்கோட்டையில் வைத்து 4 மிஷனரிகளைப் பிரதிஷ்டைச் செய்வதற்கு தேவன் உதவி செய்தார். அருட்திரு. பாஸ்கர் கனகராஜ் தலைமைப்போதகர் அவர்களின் ஆலோசனையின்படி, அருட்திரு. I.D. ஸ்டீபன் அவர்கள், அருட்திரு. S. ஆபிரகாம் அவர்கள், டீக்கன் I. தர்மதுரை அவர்கள் பிரதிஷ்டை ஆராதனையை மிக நேர்த்தியாக நடத்திக் கொடுத்தார்கள். அத்தனை போதகப் பிதாக்களுக்கும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு சார்பில் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## பிரதிஷ்டைச் செய்யப்பட்டவர்கள் விபரம்:

| மிஷனரி பெயர்கள் | தாங்குவோர் பெயர்கள் |
|---|---|
| 1. செல்வி. சுசித்திரா லிம்மா – உத்தரப் பிரதேசம் | திரு. டேவிட் செல்வராஜ், டக்கரம்மாள்புரம் |
| 2. திருமதி. சுனந்தா இயேசுபிரகாஷ் – மகாராஷ்டிரா | திரு. J. பாண்டி, தென்கலம் |
| 3. திருமதி. புசாரே ஷைலா தீனா தானா– சத்தீஸ்கட் | டாக்டர். தீனா ஜெயராஜ் |
| 4. திரு. K. ரவி – பீஹார் | சாப்டர் மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி |

*ஜெபித்து, உழைத்து, காணிக்கையால் தாங்கும் அத்தனை பேரையும் ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக!*

**– திருமதி. கிறிஸ்டி ஹீபர் பாஸ்கரன்,**
கௌரவ விரிவுப்பணி செயலர், நெல்லை வடக்கு – III



# கண்டபகாடி
## திருச்சபை வரலாறு

ஆரம்பம் முதல்
டிசம்பர் 2014 வரை

**பெல்டிஹோ பணித்தளம்,
சந்தால் பர்ஹானா பிராந்தியம்
வடகிழக்கு மண்டலம்**

*எழுதியவர்:*
**அருட்திரு. எல். மாசிலாமணி**

## பொதுவானத் தகவல்கள்

கண்டபகாடி என்பது ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள பாக்கூர் மாவட்டத்தின் ஹிரன்பூர் வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமமாகும். இதில் மொத்தம் 38 குடும்பங்கள் வசிக்கின்றனர். ஜார்க்கண்டுடன் ஒப்பிடும் போது கண்டபகாடி கிராமத்தில் கல்வியறிவு குறைவாக உள்ளது. இங்கு ஆண்களின் கல்வியறிவு 50.65% ஆகவும், பெண்களின் கல்வியறிவு 30.51% ஆகவும் உள்ளது. கண்டபகாடி கிராமத்தில், பெரும்பாலான கிராம மக்கள் பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் (ST) இங்கு பட்டியல் ஜாதியின் (SC) மக்கள் இல்லை.

## ஆரம்பம்

கண்டபகாடி கிராமம் பெல்டிஹோ பணித்தளத்தின் கீழ் வருகிறது. 1997-ல் மகேஷ்பூர் பணித்தளம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று மகேஷ்பூர் என்றும் மற்றொன்று பெல்டிஹோ என்றும் பெயரிடப்பட்டது. 1991-ம் ஆண்டு மே மாத இறுதியில் மகேஷ்பூர் பணித்தளம் திறக்கப்பட்டது. 1996-ம் ஆண்டின் இறுதியில் கொட்டா பிராந்தியத்தின் பிராந்தியச் செயலாளர் பொறுப்பேற்கும் வரை அருட்திரு. பிரபாகர சாரதி குடும்பத்தினர் இந்தப் பணித்தளத்தின் முதல் மிஷனரிகளாக இருந்தனர். அருட்திரு. பிரபாகர சாரதி குடும்பம் மற்றும் நமது சுதேச ஊழியர் திரு. இம்மானுவேல் மால்தோ ஆகியோர் மூலம் கண்டபகாடி கிராமத்திற்கு நற்செய்தி சென்றடைந்தது. அருட்திரு. அருளானந்தம் 1997-ம் ஆண்டு மகேஷ்பூர் பணித்தளப் பொறுப்பை ஏற்றார். மேலும் இவரது காலத்தில் கண்டபகாடியில் சபை நிறுவப்பட்டது. ஏப்ரல் 1998 முதல் பெல்டிஹோ பணித்தளம் உருவாக்கப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட இந்த பெல்டிஹோ

பணித்தளத்தின் முதல் மிஷனரிகளாக அருட்திரு. அருளானந்தம் குடும்பத்தினர் பொறுப்பேற்று, 2006 வரை இங்கு ஊழியம் செய்தனர். பின்னர் மிஷனரிகள் அருட்திரு. அ. சாலமோன் குடும்பத்தினர் பெல்டிஹே பணித்தளத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றனர். அவர்கள் ஜோகன் டுடுவின் வீட்டிற்குச் சென்று அவருக்கு நற்செய்தியைப் பகிர்ந்தனர்.

**ஜோகன் டுடு எப்படி நற்செய்தியை ஏற்றுக்கொண்டார் என்பதையும் விவரிக்கிறார்:**

''மிஷனரி அருட்திரு. சாரதி, சுதேச ஊழியர் திரு. இம்மானுவேல் மால் தோவுடன் எங்கள் கண்ட்பகாடி கிராமத்திற்கு வந்து இங்குள்ள மக்களுக்கு நற்செய்தி அறிவித்தார். இவர்கள் என் வீட்டிற்கும் வந்து நற்செய்தியைப் பகிர்ந்துகொண்டனர். பின்னர் அவர்கள் கிராமத்திற்குள் சென்று நற்செய்தியை அறிவித்தனர். அப்போது நான் கிறிஸ்தவனாக இல்லாவிட்டாலும், எனது பிள்ளைகள் கத்தோலிக்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கையைப் பற்றி சில கிறிஸ்தவ வார்த்தைகளைப் பேசுவார்கள். நான் மிஷனரி மற்றும் சுதேச ஊழியர் மூலம் நற்செய்தியைக் கேட்டபோது, கிறிஸ்தவ நம்பிக்கையைப் பின்பற்ற முடிவுச் செய்தேன். இந்தக் கிராமத்திற்கு அருகிலுள்ள ஆற்றில் இயேசுவை அறிக்கையிடுவோர்களுக்கென முதல் ஆராதனை நடத்தப்பட்டது. அன்று, அசம்ஜோலோ, போக்ரியா, போச்லா ஆகிய இடங்களிலிருந்து விசுவாசிகள் இந்த இடத்திற்கு வந்து இயேசுவை அறிக்கையிட்டனர். இதை ஒரு பெரியக் கொண்டாட்டமாக இந்த ஆராதனையை நடத்தினர். அதே நாளில் என் கிராமத்தைச் சேர்ந்த மேலும் 2 குடும்பங்கள் இயேசுவை அறிக்கையிட்டனர். அன்று மொத்தம் 16 பேர் கிறிஸ்துவின் அடியவராயினர். நாங்கள் 4 வருடங்கள் காலஜோர் கிராமத்திலுள்ள தேவாலயத்தின் ஆராதனைகளில் கலந்துகொண்டோம். அதன்பிறகு, 2003- கண்ட்பகாடியில் எனது வீட்டில் முதல் ஆராதனை ஆரம்பித்து நடத்தப்பட்டுத் தொடர்ந்து என் வீட்டிலேயே 4 வருடங்களாக ஆராதனை நடத்தப்பட்டது.”

இந்த ஆராதனைகளில் 8 குடும்பத்தினராக 30 நபர்கள் கலந்துகொண்டனர். ஜோகன் டுடு மற்றும் மத்தியாஸ் ஆகியோர் இந்த ஆராதனைகளை நடத்தி வந்தனர்.

## சபை வளர்ச்சி:

ஜோகன் டுடுவின் வீட்டில் சபை ஆராதனைகள் நடந்துகொண்டிருந்த போது விசுவாசிகளின் ஜெபங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக சிலருக்கு அற்புத சுகம் கிடைத்தது. படோ கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் நோய்வாய்ப்பட்டு சில வருடங்களாக படுத்தப்படுக்கையாக இருந்தார். அவரது வீட்டில் உள்ளவர்கள் தங்கள் பாரம்பரியக் குருக்களிடம் (மந்திரவாதிகள்) முயற்சித்தனர். ஆனால் அவள் குணமாகவில்லை. கடைசியாக, அவள் ஜோஹன் டுடுவின் வீட்டில் நடந்த ஆராதனைக் கூட்டத்திற்கு வந்தாள். அவள் குணமடைய விசுவாசிகள் தேவனிடம் ஜெபம் செய்தனர். தேவகிருபையால் அவள் குணமடைந்ததும் அவளால் எழுந்து நடக்க முடிந்தது.

மந்தன் மராண்டி, ஜோகன் டுடுவின் அண்டை வீட்டாராக இருந்தார். அவர் ஒரு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். மேலும்

அவர் தான் மரணத்தை நெருங்கிவிட்டதாக உணர்ந்தார். அவருக்காக ஜெபிக்க கிறிஸ்தவ விசுவாசிகளை அவரின் வீட்டார்கள் அழைத்தார்கள். விசுவாசிகள் அவருக்காக மூன்று அல்லது நான்கு முறை ஜெபிக்கச் சென்றனர். ஜெபத்தின் மூலம் அவர் குணமடைந்தார். அவரின் வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் எடுத்தார்கள். இருளில் மூழ்கியிருந்த கிராம மக்கள் கிறிஸ்தவ நம்பிக்கைக்குள் வருமாறு ஜோகன் டுடுவும் விசுவாசிகளும் ஜெபித்துக் கொண்டிருந்தனர். பலரை கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் கொண்டுவர தேவன் அவர்களுக்கு உதவினார். ஒருமுறை அவர்கள் பிஸ்நாத்பூரிலிருந்து திரும்பியபோது, ஜோகன் டுடு 5 குடும்பங்களைத் தருமாறு வேண்டிக்கொண்டார். தேவன் அவருடைய ஜெபங்களைக் கேட்டு, 5 குடும்பங்களைப் புதிதாகக் கொடுத்தார்.

## ஆலயக் கட்டுமானம் - நிலம் அன்பளிப்பு:

ராபர்ட் கிஸ்கு நிலத்தின் உரிமையாளர். அவரது மனைவியின் பெயர் ரோஜ்பெல் முர்மு. தேவாலயக் கட்டுமானத்திற்கு நிலம் கொடுத்ததற்கான காரணம் என்னவென்றால்:

“வழிபாட்டுக்காக விசுவாசிகள் ஒரு சிறிய வீட்டில் உட்காருவது சிரமமாக இருந்தது. ஆகவே அவர்கள் ஆராதனை நடத்த தனிக் கட்டிடம் கட்ட விரும்பினர். எனவே தங்கள் நிலத்தைக் கொடுத்தார்கள்.”

**கண்டப்பகாடி கிராமத்தில் தேவாலயக் கட்டுமானம் பற்றி சபை மூப்பர் ஈசாக் முர்மு விவரிக்கிறார்:**

“தேவாலயக் கட்டுமானத்தில் மக்கள் முழுமுயற்சி எடுத்தார்கள். 2006-ம் ஆண்டு கட்டுமானப்பணித் துவங்கியது. தேவாலயக் கட்டுமானப்பணிக்குச் சில தடைகள் ஏற்பட்டன. நில உரிமையாளர் சிறிய தொந்தரவு கொடுத்தார். மிஷனரி அருளானந்தம் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தார். அஸ்திபாரம் தோண்டுவதற்கு உள்ளூர் விசுவாசிகள் இலவச உழைப்பைக் கொடுத்தனர். மூங்கில்களை வழங்கினர். பின்னர் மீதியுள்ளக் கட்டுமானப்பணிக்கு அவர்கள் ஒரு நாளைக்கு கூலியாக ரூ.30-க்கு வேலை செய்தனர். அப்போது வெளியே தொழிலாளர்களின் கட்டணம் ரூ.80/-ஆக இருந்தது.’’ ஜனவரி 2007-ல் தேவாலயக் கட்டுமானப்பணிகள் முடிவடைந்தன. ஆனால், ஆலயப்பிரதிஷ்டை மிகவும் தாமதமானது. இந்த தேவாலயம் 14.03.2011 அன்று டோனாவூர் ஜெபக்குழுத்தலைவர் லிசி அவர்களால் பிரதிஷ்டைச் செய்யப்பட்டது. டோனாவூர் ஜெபக்குழு உறுப்பினர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## சபை ஊழியங்களும் சபையைப் பற்றியத் தகவல்களும்:

ஞானஸ்நானம் பெற்ற மொத்த உறுப்பினர்கள் 34 குடும்பங்கள், 250 விசுவாசிகள். ஒவ்வொரு ஞாயிறு ஆராதனைகளிலும் சபை, விசுவாசிகளால் நிரம்புகின்றனர். ஞாயிறு ஆராதனைகளில் 100-க்கும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்து கொள்கின்றனர். சஹ்ராம்பூர் மற்றும் கண்டப்பகாடி கிராமங்களிலிருந்தும் விசுவாசிகள் வந்து இந்த ஆராதனைகளில் கலந்துகொள்கின்றனர். ஈசாக் முர்மு மற்றும் ஜோகன் டுடு ஆகியோர் இந்த தேவாலயத்தின் ஆராதனைகளை நடத்துகிறார்கள். ஆண்டுக்கு 30 பேர் புதிதாக இயேசுவின் மந்தையில்

இணைகின்றனர். அருகிலுள்ள ஆற்றில் ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது. ஆற்றில் தண்ணீர் இல்லையென்றால் தேவாலயத்தில் வைத்து ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது.

## பல்வேறு கூட்டங்கள்:

பெண்களுக்கானக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மாதம் ஒருமுறை விசுவாசிகள் முகாம் நடத்தப்படுகிறது. விடுமுறை வேதாகம வகுப்புகள் வருடத்திற்கு 2 முறை நடத்தப்படுகிறது. சிறிய ஜெபக்குழுக்கள் வாரந்தோறும் புதன்கிழமைகளில் கூடுகின்றன. ஆண்களுக்கான கூட்டம் வருடத்திற்கு 4 முறை நடத்தப்படுகிறது. முன்பு ஞாயிறுப்பள்ளி வகுப்பு நடத்தப்பட வில்லை, இப்பொழுது நடத்தப்படுகிறது. சேகரச் சபை ஆராதனை மாதத்திற்கு ஒருமுறை நடைபெறும்; ஆராதனையில் சேகரச் சபைகளிலுள்ள அனைத்து விசுவாசிகளும் கலந்துகொள்கின்றனர்.

### தற்போதைய சுதேச ஊழியரான பவுலூஸ் மராண்டியின் ஊழியத்தின் மூலம் நடந்த ஒரு அற்புதம்:

சோகே கிராமத்தில் தேவிலால் ஒரு குருவாகச் செயல்பட்டு வந்தார். வாரந்தோறும் ஏறக்குறைய 200 பேர் அவருடைய வீட்டில் கூடுவார்கள். அவரது மருமகள் நோய்வாய்ப்பட்டாள். அவரால் அவளைக் குணப்படுத்த முடியவில்லை. பின் நாளுக்குநாள் அவரது குடும்பங் களில் பலர் நோய்வாய்ப்பட்டனர். பின்னர் அவர்கள் உள்ளூர் சுதேச ஊழியரை ஜெபிப்பதற்கு அழைத்தனர். அவர் சென்று அனைவருக்காகவும் ஜெபம் செய்தார். தேவன் அவர்கள் அனைவரையும் ஜெபத்தின் மூலமாகக் குணப்படுத்தினார். அவர்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்கள் ஜிர்லி கிராமத்தி லுள்ள சபை ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள்.

நற்செய்தி ஊழியத்திற்காக இந்த தேவாலயத்திற்குட்பட்ட 3 கிராமங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை சஹ்ராம்பூர், கோடா, படு ஆகும். சஹ்ராம்பூர் கிராமத்தில் 17 குடும்பங்கள் விசுவாசிகளாக உள்ளனர். இப்போது மற்ற 2 கிராமங்களிலும் கவனம் செலுத்தப்படுகிறது. ஜோகன் டுடு, ஈசாக் முர்மு, லிபன் டுடு ஆகியோர் நற்செய்தி ஊழியம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பாடல்களைப் பாடி தங்கள் சாட்சிகளைப் பகிர்ந்துக்கொள்கிறார்கள். பல புதிய நபர்கள் விசுவாசத்திற்குள் வருவதால் அவர்கள் மகிழ்ச்சியடை கிறார்கள். அவர்கள் தங்கள் ஊழியத்தைத் தொடங்குவதற்கு முன்பு கிராம மக்களிடம் அனுமதி பெறுவதால், எந்த எதிர்ப்பும் நேரிடுவது இல்லை. ஈசாக் முர்முவும் அவரது மனைவியும் சிறிய குழு ஊழியத்தை நடத்துகிறார்கள்.

## ஸ்கேன் மற்றும் அங்கத்தினர் குடும்பக்கூடுகை

**பல்லாவரம்**

**நாள்:** 15.10.2023

**இடம்:**

சீயோன் சுவிசேஷ ஸ்தலம்,
சீயோன் காம்ப்லெஸ் / பம்மல்
மெயின் ரோடு, முத்தமிழ் நகர்,
பம்மல், சென்னை -17.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - கன்னியாகுமரி மாவட்டம்**

## பெண்கள் கூடுகை - 2023

**நாள்:** 07.10.2023 சனிக்கிழமை
**நேரம்:** காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
**இடம்:** புதுக்குடி சி.எஸ்.ஐ. ஆலயம், நாகர்கோவில்
தொடர்பு: 90034 05484.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - கே.கே.நகர்**

## ஸ்கேன் ஆதரவாளர் குடும்பக் கூடுகை மிஷனரிப் பிரதிஷ்டை ஆராதனை

**நாள்:** 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** மாலை 4 மணிக்கு
**இடம்:** கோயில்பிள்ளை பள்ளி வளாகம், ராயலா நகர்,
2-வது தெரு, ராமாபுரம், சென்னை - 89
தொடர்பு: 94442 10711

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - பாடி பிராந்தியம்**

## ஸ்கேன் குடும்பக் கூடுகை

**நாள்:** 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை - மாலை
**இடம்:** K.S.P. மஹால்TMP நகர் Extn, பாடி, சென்னை - 50

## குடும்பக் கூடுகை - போரூர்

**நாள்:** 08.10.2023 ஞாயிற்றுக்கிழமை - மாலை 5.00 மணிக்கு
**இடம்:** ஈஸ்வரி மஹால், போரூர்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - கன்னியாகுமரி மாவட்டம்**

## கிதியோனியர் முகாம் - 2023

**நாள்:** 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை மற்றும்
24.10.2023 செவ்வாய்க்கிழமை
**இடம்:** நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி வளாகம், மார்த்தாண்டம்

***குறிப்பு:*** *பதிவுக்கட்டணம் :*
*பெரியவர், வாலிபர், இளம் வாலிபர் ரூ.100/-, சிறுவர் ரூ.50/-*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - திருவள்ளூர்**

## மிஷனரி தரிசன குடும்பக் கூடுகை - 2023

**நாள்:** 14.10.2023 - சனிக்கிழமை
**நேரம்:** காலை 9 மணி முதல் மதியம் 1.30 மணி வரை
**இடம்:** I.V.R. திருமண மண்டபம், ஆயில்மில், திருவள்ளூர்.
தொடர்பு: 98944 05442

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

## பெண்கள் கூடுகைகள் - 2023

### திருச்சி

**நாள்:** 14.10.23 - சனிக்கிழமை **நேரம்:** காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை **இடம்:** FMPB சிநேகாலயா, சீனிவாசபுரம்.

### தாராவி, மும்பை

**நாள்:** 21.10.23 - சனிக்கிழமை **நேரம்:** காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை **இடம்:** CNI ஆலயம், தாராவி.

### பெங்களூரு, தெற்கு

**நாள்:** 23.10.23 - திங்கட்கிழமை **நேரம்:** காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை **இடம்:** C.S.I. கிறிஸ்து ஆலயம், ஜெய்நகர்.

### ரஹ்மத் நகர், நெல்லை

**நாள்:** 23.10.23 - திங்கட்கிழமை **நேரம்:** காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை **இடம்:** C.S.I. நல்மேய்ப்பர் ஆலயம்.

### தென்காசி

**நாள்:** 24.10.23 - செவ்வாய்க்கிழமை **நேரம்:** காலை 9.30 மணி முதல் மதியம் 2 மணி வரை **இடம்:** தென்காசி.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மற்றும்**
**C.S.I. தூய பவுலின் ஆலயம் இணைந்து நடத்தும்**

## மிஷனரி தரிசன குடும்பக் கூடுகை - 2023

**நாள்:** 29.10.2023 - ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை
**இடம்:** C.S.I. தூய பவுலின் ஆலயம், கோவில்பட்டி.

## 1 அக்டோபர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. யுவனேஷ் T.

## ஜம்மு

### சாம்பா: டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** நான்கு கிராமங்களில் 1060 நபருக்கு தேவவார்த்தை பகிரப்பட்டதற்காக; ஜுங்கி கிராமத்தில் 2 பேர் இயேசுவின் அடியவராகி அவர் மந்தையில் சேர்க்கப்பட்டதற்காக; 2 வேதாகமங்களும், 15 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டதற்காக; இப்பணித்தளத்தின் விசுவாசிகளும், மூப்பர்களும் இணைந்து தங்கள் கிராமங்களுக்குச் சுவிசேஷத்தைக் கொண்டுச் செல்கின்றனர். பாடியாரி மற்றும் பந்தி கிராமத்திலிருந்து வரும் புதிய குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வங்காட்டிவருகின்றனர். பந்தி என்ற கிராமத்திலிருக்கும் ரேகாவும் மற்றும் சக்ஜுங்கி கிராமத்தைச் சேர்ந்த கவிதாவும் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றனர். கூட்டா கிராமத்தில் வசிக்கும் அனு மற்றும் நேகாவின் வீடுகள் மழையினால் சேதமடைந்த நிலையில் ஜெபித்தபோது, வீட்டைச் சீர்செய்ய அவர்களுக்கு அரசாங்க உதவி கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சும்பு, கூட்டா, பொங்வால், சுங்வாலி மற்றும் சாம்பா பகுதியைச் சுற்றியிருக்கும் கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் கிடைக்கவும், இயேசுவை ஏற்றுக்கொள்ளவும்; மஹாஷா மற்றும் ராஜ்புத் மக்கள் கூட்டம் முழுவதுமாக இயேசுவை ஏற்றுக்கொள்ள; பிறந்ததிலிருந்து பேசமுடியாமலிருக்கும் 15 வயது அஞ்சலாவின் நாவின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு சரலமாகப் பேச; மத்தா மற்றும் உத்தம் சந்த் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; ராகேஷ், ரோஷன், தர்சேம் மற்றும் ரோமி குடியிலிருந்து விடுதலைப் பெற; சர்க்கல் கிராமத்தைச் சேர்ந்த பவன் குடும்பத்திற்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; சக்ஜுங்கி கிராமத்தைச் சேர்ந்த அஷோக் பீர்பாபாவின் பக்தன் மற்றும் விஷால் ஆகியோர் தங்கள் குடும்பங்களை ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்க; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ரெடியன் மற்றும் டியானி கிராமத்து மக்கள் மனம் மாற; சும்பு மற்றும் கூட்டா கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

### *உபத்திரவத்திலும் சாட்சி!*

*ஜார்க்கண்ட் மாநிலம், படாஜாம்டாவிலுள்ள பாலிசாய் கிராமத்தில் வசிக்கும் பிபேகா சுண்டி குடும்பம், நமது ஊழிய வளர்ச்சியில் மிக முக்கியமானப் பங்கு வகிக்கின்றனர். ஆலயக் குழுவிலும் துணைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். தினசரி மாலை சிறு ஆராதனைக் குழுவைத் தொடர்ந்து நடத்தி, படாஜாம்டா ஆலயத்திற்கு அநேக ஆத்துமாக்களைக் கொண்டு வந்துள்ளார். நமது ஊழியத்தை எதிர்த்து வந்த எதிர்ப்பாளர்கள் பிபேகாவின் மளிகைக் கடைக்கு வேண்டுமென்றே தீ வைத்து எரித்தனர். அதனால் சுமார் மூன்று லட்சத்துக்கும் அதிகமானப் பொருட்கள் சேதமடைந்தது. ஆனாலும் அவர்கள் ஆண்டவர் மேல் வைத்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் விட்டு விடாது, யோபுவைப் போல் எந்தச் சூழ்நிலையிலும் ஆண்டவரை விட்டு விலகாமல் இருப்பது மட்டுமல்லாமல், தங்கள் வீட்டில் நடந்த அந்த ஆராதனைக் குழுவைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். அவருடைய சாட்சியுள்ள வாழ்விற்காக ஆண்டவரைத் துதிப்போம். இந்த இக்கட்டானச் சூழ்நிலையிலிருந்து தேவன் தாமே அந்தக் குடும்பத்தின் தேவைகளைச் சந்திக்கவும் இழப்பிலிருந்து மீண்டு வருவதற்குத் தேவையானக் கிருபையையும் தேவன் தரும்படியாய் ஜெபிப்போம்.*

## 2 அக்டோபர்
திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. வீரேந்திர குமார்
திரு. டேவிட்சன் ராஜாசிங்
திருமதி. சுனிதா வீரேந்திர குமார்
திரு. தேசாய் திலீப்பாய்

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ரோஹ்ரு:

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** 145 பேர் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டதற்காக; 4 புதிய ஏற்பாடுகளும், 1 வேதாகமமும் விநியோகிக்கப்பட்டதற்காக; 19 இரவு கூட்டங்களும், 2 நாட்கள் தேசிய உபவாசக் கூடுகையும் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக; சௌரா ஆலய ஆராதனையில் 2 புதிய குடும்பங்கள் கலந்துகொள்வதற்காக; மழையில்லாத நிலையில் அநேக பழத்தோட்ட உரிமை யாளருக்குப் போதுமான அளவு விளைச்சல் இல்லாதபோதும் நமது விசுவாசிகளுக்கும் தன்னார்வலர்களுக்கும் நல்ல விளைச்சலை தேவன் கட்டளையிட்டதற்காக; சாலை விபத்தில் அதிகளவில் காயப்பட்டிருந்த பாபுலாலுக்கு தேவன் கொடுத்த சுகத் திற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** மழை மேக வெடிப்பினாலும், திடீர் வெள்ளப்பெருக்கினாலும், நிலச் சரிவினாலும் நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமச் சாலைகள் பெரிதும் பாதிப்படைந்தி ருக்கிறது. இங்கு சுமார் 200 மக்கள் மரித்துப்போய்விட்டனர், 150 பேர் காணாமற்போயிருக்கின்றனர். அநேக கட்டிடங்கள் மற்றும் வீடுகள் முழுவதுமாக இடிந்துவிட்டன. இதைச் சரிசெய்ய 2 ஆண்டுகள் ஆகுமென்று அரசாங்கம் அறிக்கைக் கொடுத்துள்ளது. ஹிமாச்சலின் இந்நிலை மாற ஜெபிப்போம். போதை வஸ்துக்களுக்கும், புகைபிடித்தலுக்கும் அடிமைப்பட்டிருக்கும் இளம் வாலிபர்கள் இயேசுவில் விடுதலைப் பெற; ரீனாவின் கருமுட்டைக்குழாயில் குழந்தை உருவாகியிருக்கிறது. குழந்தை தாய் மற்றும் சேயிக்கும் எந்த உயிர் சேதமுமின்றி பிறந்திட; காலில் அறுவை சிகிச்சை முடித்து மறுஅறுவை சிகிச்சைக்கு மருத்துவர்கள் வலியுறுத்தும் சூழ்நிலையிலிருக்கும் பார்வதி தேவி அறுவை சிகிச்சையின்றி சுகம் பெற ஜெபிப்போம்.

# பஞ்சாப்

### ஜைத்தோ: சித்தரஞ்சன் தான்டி & தெஜஸ்விதா

**துதிக்க:** 520 நபர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சத்சங் கூடுகைகள், ஒரு வெளிப்புற ஊழியம், பெண்களுக்கான ஒரு கூடுகை மற்றும் வாலிபர்களுக்கான ஒரு பயிற்சி நடைப்பெற்றன. சத்சங் வெளிப்புற ஊழியத்திற்கு மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. கர்ப்பப்பை புற்றுநோயிலிருந்து பிரவீன் கௌர் சுகம் பெற்றார். அசுத்த ஆவியின் பிடியிலிருந்து கிர்னா கௌர் விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்களான கோகி, ராஜ், பல்பிந்தர் கௌர், குர்மேல் கௌர் மற்றும் கெய்வால் சிங் போன்ற குடும்பத்தினரை நற்செய்திக்கு நேராய் கர்த்தர் வழிநடத்த; போதைப்பழக்கத்தி லிருந்து கோகி விடுவிக்கப்பட; ஜைத்தோ துணை மையம் மற்றும் பாஜா கானா மையங்களில் ஊழியம் செய்யத் தன்னார்வத் தொண்டர் கிடைக்க; குடும்பப் பிரச்சினைக் காரணமாகப் பிரிந்திருக் கின்ற பிரேம்சிங் குடும்பம் மீண்டும் ஒன்றிணைய; நமது விசுவாசிகளைத் திசைத் திருப்பக் குழப்பிக்கொண்டிருக்கும் தனிப் போதகர்களான கங்கதீப் சிங், பிரதீப் சிங், சேவக் சிங் பிரீத் சிங் ஆகியோர் நமது விசுவாசிகளிடமிருந்து விலகி நிற்க ஜெபிப்போம்.

## 3 அக்டோபர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ராபின்சன் ஹஸ்தக்

### மோகா:
**ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி**

**துதிக்க:** புதியதோர் கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 25 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டன. 5 இரவுக் கூடுகைகள், சிறுவர்களுக்கான 7 கூடுகைகள், இளைஞர்களுக்கான 2 கூடுகைகள், வாலிபருக்கான ஒரு பயிற்சிக் கூடுகை, ஒரு ஆத்தும ஆதாயப்பயிற்சி மற்றும் பெண்களுக்கான 4 கூடுகைகள் நடத்தப்பட்டன. கடுமையான மார்பு வலியிலிருந்து சுக்வீர் கௌர் விடுதலை பெற்றார். கருத்து வேறுபாடு காரணமாக வீட்டை விட்டுப் பிரிந்து சென்ற மின்டு சிங்கின் மனைவி ஜெபத்தினால் மீண்டும் வீட்டிற்குத் திரும்பி வந்து கணவருடன் சமாதானமாக வாழ்கின்றார். பொய்க் குற்றச்சாட்டின் பேரில் சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்த சரன்தாஸ் மற்றும் கரன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயத்திற்கு ஒழுங்காக வராமல் பின்வாங்கியுள்ள விசுவாசிகள் மீண்டுமாக விசுவாச வாழ்விற்குள் வர; அறித்வாலி, ஜலாலாபாத், சுட்சாக், கவூரி, ராய்கோட், கிஷான்புரா, ஜக்ரான், சிட்டெக் மற்றும் துடிக்கே போன்ற கிராமங்களில் நற்செய்திக்குத் திறந்த வாசலைக் கர்த்தர் கொடுக்க; கிரன், நித்து, பிந்தர் மற்றும் ராமன் ஆகியோர் அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட; ஞாயிறு ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்ள தன் மனைவி ரமாவை அவரது கணவர் அனுமதிக்க; மதுப்பழக்க அடிமைத்தனத்திலிருந்து அமன், மன்னா ஆகியோர் விடுவிக்கப்பட; பக்கவாத நோயிலிருந்து இளம் வாலிபன் ரிஸ்பால் குணமடைய; நிக்கி, ராமன், ரசான், மம்தா, ரிஜியன், ரீஜா, சீலி மற்றும் ராஜி தம்பதியர் போன்ற குடும்பங்கள் மழலைச் செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### புத்லாடா:
**ஹமோம் நாபா சிங் &**
**துலந்தி ரியாங்**

**துதிக்க:** 1400 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; 2 பேர் விசுவாச வாழ்விற்குள் வந்து தேவமந்தையில் இணைக்கப்பட்டதற்காக; இருதய அறுவை சிகிச்சையின்றி ஜெபத்தினால் சுகம் பெற்ற ரிங்குவின் விசுவாசத்திற்காக; அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதீப் மற்றும் கௌடிக்காக; நிர்மலா & மார்பதி ஆகியோர் ஜெபத்தினால் சுகம் பெற்றதற்காக; விசுவாசத்தில் பின் வாங்கியிருந்த டல்வாரி & பரேட்டா திரும்பவும் விசுவாச வாழ்விற்குள் வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தோள்பட்டை எலும்பு முறிவினால் அவதியுறும் 6 வயது ஹேனாவிற்காக; சாத்தானின் பாதிப்பினால் மன அழுத்தத்திற்குள் சென்றிருக்கும் அபிஷேக் & சாலினி விடுவிக்கப்பட; தற்கொலைச் செய்து கொண்ட ஹர்பஞ்ச் குடும்ப ஆறுதலுக்காக; புத்லாடா மேளாவின் ஆசீர்வாதத்திற்காக மற்றும் அநேகர் பங்குபெற்று ஆவிக்குரிய வாழ்வில் வளர; டோரா, பட்ரா & கானக் வாலா பிராந்திய அளவிலான வெளிப்புற ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## 4 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. தனேதி உத்தமஸ்ரீ இஸ்ரேல்

## ஹரியானா

### பர்வாலா:

**மிண்டு குட்டும் &**
**சுப்ராபாக், அஜய் பர்டே**

**துதிக்க:** ஐந்து கிராமங்களில் 10 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 25 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. 4 சத்சங் கூடுகைகள், 5 இரவுக் கூட்டங்கள் மற்றும் 6 இடங்களில் வெளிப்புற ஊழியங்கள் நிறைவேற்றப் பட்டன. உள்ளூர் மக்களின் ஆதரவால் வாலிபர்களுக்கான 11 முகாம்கள் மற்றும் பெண்களுக்கான ஒரு முகாம் ஆகியவை நடத்தப்பட்டன. ஹசன்பார் என்னுமிடத்தில் சிறுவர் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிரன் மற்றும் சோனு குடும்பப் பிரச்சினை சுமூகமாகத் தீர்க்கப்பட்டு, கணவனும் மனைவியும் மீண்டும் ஒன்றிணைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புள்ள பிரேம்நகர் தானி என்னுமிடத்தில் நற்செய்திக்குத் திறந்தவாசல் உருவாக; கைபிபூர் கிராமங்களான சாம் ஹெர், மீனா, ஈஷ்வர், பாக்யாதே மற்றும் விஜேந்தர், சானியானா கிராமத்தைச் சேர்ந்த பிரேம், சந்தோஷ், நைனா, தானி மற்றும் நவ்யா பர்வாலா கிராமத்தைச் சேர்ந்த சோனு ஆகியோர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சானியானா கிராமத்தில் ஆலயக்கட்டு மானப்பணி ஆரம்பிக்கப்படவும், எதிர்ப்புகள் முற்றிலும் மறைந்து போகவும் ஜெபிப்போம்.

### ஃபத்தேஹ்பாத்:

**டேவிட் எஸ். & ஜெபா கிரேஸ்**

**துதிக்க:** சுவிசேஷத்தை 180 பேருக்கு அறிவிக்க நமது ஊழியர்களுக்கு தேவன் உதவியதற்காக; இளம் வாலிபரான ஜாட்டின் கழுத்திலுள்ள கட்டிக்காக விசுவாசிகள் ஜெபித்தபோது தேவன் கொடுத்த அற்புத சுகத்திற்காக; கோர கார் விபத்திலிருந்து சூரஜின் ஜீவன் பாதுகாக்கப்பட்டதற்காக; அஷோக் நகர் ஆராதனைக்குழுவில் ஆரம்பிக்கப்பட்ட முதியோர் கல்வித் திட்டம் வெற்றிகரமாக நடைப்பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாங்கட் ராமின் 3 பிள்ளைகளும் தோல் வியாதியிலிருந்து சுகம் பெற; ராஜூவின் மனைவி தன் கணவர் மீது வழக்குத்தொடுத்து, பிள்ளைகளையும் அவரிடமிருந்து பிரித்த அவர், தன் கணவருடன் ஒப்புரவாகி இணைந்து வாழ; புதிதாக இணைந்த 3 மிஷனரிகளாகிய மெலிட்டா, ஷைட்டுள் மற்றும் ஞாயில்ஜல்ஹிங் கலாச்சாரம் கடந்து செய்யும் ஊழியத்தில் தேவ ஞானம் கிடைக்க; குருதேஜிக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்க; நமது ஊழியரின் மனைவி ஜெபா கிரேஸ் சுகப்பிரசவத்தில் குழந்தையைப் பெற்றெடுக்க ஜெபிப்போம்.

## 5 அக்டோபர்
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ராக்கி மார்தி

### ஜீவன் நகர்:
### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** 395 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக; 95 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டதற்காக; 4 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக; 7 பெண்கள் ஜெபக்கூடுகை மாதந்தோறும் தவறாமல் நடைபெறுவதற்காக; 7 சிறிய வேதாகம வகுப்புகளில் கலந்துகொண்ட 34 ஆண்கள் மற்றும் 70 பெண்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபாவாலி ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் நாயக் என்ற புதிய மக்கள் கூட்டத்திற்காக, அவர்களும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ஜாட் (பகுழ், அரோடா, குக்கட், பாபரி, நை. கம்போஜ், யாதவ், லோகர், ராம்கடியா மற்றும் பகத் ஆகிய ஜீவன் நகரில் வசிக்கும் மக்கள் கூட்டங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள; சந்த் நகர் ஊழியங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சீக் குழுவினர் ஜெபத்தால் மனம் மாற; அபுப் சேகர், மோனியா மற்றும் கும்மியாரா கிராமங்களில் மக்கள் வேதாகம வகுப்புகளில் கலந்துகொள்ளவும், வேதத்தை நன்கு கற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

### கலான்வாலி:
### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** கலான்வாலி கிராமத்தில் நடைப்பெற்ற சத்சங் கூடுகையில் கலந்துகொண்ட 15 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; பிசாசின் கட்டிலிருந்து 17 வயது முஸ்கான் விடுவிக்கப்பட்டதற்காக; பெண்கள் மற்றும் வாலிபர்கள் மத்தியில் ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டதற்காகவும், மஞ்சள் காமாலையிலிருந்து சுகம் பெற்ற சங்கருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜக்மல்வாலி, கலான்வாலி மண்டி மற்றும் ஆசீர் கிராமங்களில் வேதாகம வகுப்புகள் மற்றும் ஜெபக்கூடுகைகள் துவங்கப்பட; விபச்சார தொழிலில் ஈடுபட்டு, எய்ட்ஸ் நோயினாலும், போதை வஸ்துக்களாலும் பாதிக்கப்பட்டிருக்கும் வாலிபர்கள் மனம் திரும்ப; கலான்வாலி மற்றும் ஆசீர் கிராமங்களில் உருவாகியுள்ள புதிய ஆலய செயற்குழுவானது விசுவாசி களின் வளர்ச்சிக்கு ஏதுவாக செயல்பட ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### பஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** 400 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப் பட்டது. 4 பேர் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 4 வேதாகமங்களும், 7 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டன. அசுத்த ஆவியின் பிடியிலிருந்து ரேகா விடுவிக்கப்பட்டார். பாம்புக்கடியிலிருந்து சோட்டேலால் குடும்பம் பாதுகாக்கப்பட்டன. வலிப்பு நோயிலிருந்து குல்வந்சிங் சுகம் பெற்றார். ரேகா இரத்த பாதிப்பு நோயி லிருந்தும், பான்சோபேந் சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற்றனர். விபத்தில் சிக்கிய எட்டாவா கிராமத்தைச் சேர்ந்த அம்ரோபாய் கழுத்தில் அடிப்பட்டு நடக்க முடியாமலிருந்தார். ஜெபத்தின் வாயிலாக இப்போது உட்காரவும், நடக்கவும் ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு திரைப்படத்தால் தொடப்பட்டவர்கள் தங்கள் விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிட; பிசாசின் பிடியிலிருந்து பூட்டாசிங் விடுவிக்கப்பட; தண்டுவட காயத்திலிருந்து நீலாவும், நுரையீரல் பிரச்சினையிலிருந்து குர்மீத் சிங்கும், நாவிலுள்ள கொப்புளங்களிலிருந்து பரம்ஜீத்தும் சுகம் பெற; ஷோகினி மற்றும் மோனிகா குடும்பங்களில் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

## 6 அக்டோபர்
வெள்ளி

### மல்தன்சோர்:
**ஷிஷு பால் & அனிதா**

**துதிக்க:** 4 கிராமங்களில் 652 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 4 விசுவாசிகள் இயேசுவின் அடியவராயினர். 26 புதிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. 13 சத்சங் கூடுகைகள், 9 இரவுக் கூடுகைகள், 3 வெளிப்புற ஊழியங்கள் மற்றும் 4 உபவாச ஜெபக்கூடுகைகள் நடத்தப்பட்டன. தூரி ஆலய ஆராதனையில் பங்கு பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த ஆலயத்தில் இரவுக்கூடுகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அன்சன் மற்றும் ரஜ்வந்த் கௌர் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றனர். பல் வாரிலால் மற்றும் ரானோ கௌர் பக்கவாத நோயிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போகூர் மற்றும் ஜீனிதேபூர் ஆலயங்கள் இன்னும் அதிகமாக விரிவடைய; பன்வாரி லால், கஜல், அன்சல், சுபாரி, அபய், சீலிசரண், சம்பா ஆகியோர் கர்த்தர் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிட; சோப்ரா மற்றும் லேதி கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க கர்த்தர் திறந்த வாசலை உருவாக்க; பிபின், ஸ்வர்ண கௌர், பன்வாரி ஆகியோர் உயர் இரத்த அழுத்தத்திலிருந்து சுகம் பெற; ஷிவ்நாத்கர் கிராமத்தில் இரவுக் கூடுகை ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

### நானக்மட்டா:
**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** மூன்று கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 277 பேர் சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்டதற்காக; 27 பேர் புதிய ஏற்பாட்டை விருப்பத்தோடு பெற்றுக்கொண்டதற்காக; பிரியங்காவிற்கு தேவன் கொடுத்தக் குழந்தைப் பாக்கியத்திற்காக; மின்சாரத் தாக்குதலிலிருந்து தேவன் ரிங்குவை பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுக்தேவிற்கும் அவருடைய மனைவிக்கும் இடையேயுள்ள குடும்பப் பிரச்சினையில் தேவன் சமாதானம் கொடுத்து தேவமந்தையில் இணைக்க; மூலப்பிரச்சினையினால் கஷ்டப்படும் 8 வயது சிறுவனுக்குப் பரிபூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### *நீதியுள்ள நீதிபதி:*

*ஜார்க்கண்ட் மாநிலம், படிட்டோலா பணித்தளத்தி லுள்ள கோப்லாடி தேவாலயத்தின் மூப்பர் சஹால் டுடு, ஆகஸ்ட் மாதம் 1-ம் தேதி பர்ஹைட் காவல் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என்ற எதிர்ப்பாராத அழைப்பை ஜுலை 26-ம் தேதி பெற்றார். அந்த அழைப்பு உயிருக்கு ஆபத்தான ஒரு சூழ்நிலையைக் கொடுப்பது போன்ற பயமுறுத்துதலுடன் இருந்தது. ஆனால் நமது மூப்பரோ குறிக்கப்பட்ட நாளில் காவல்துறையில் எந்தவொரு பயமுமில் லாமல் ஆஜரானார். அங்கு அதிகாரிகள் அவருக்கு இறுதி எச்சரிக்கைக் கொடுத்தது மட்டுமல்லாமல், இன்னொரு நபரையும் அழைத்து வரவேண்டும் இல்லையென்றால், அவர் சிறையில் அடைக்கப்படுவார் என்றும் எச்சரித்தனர். நமது விசுவாசியோ சற்றும் தாமதிக்காமல் அடுத்த நாளே தன்னுடன் இன்னொரு நபரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். விசாரணையில் சஹால் டுடு மீது எந்த குற்றமும் கண்டுப்பிடிக்க முடியவில்லை. ஆகையால், இந்த வழக்கை முடிக்க ரூ.20,000/- தர வேண்டும் என்றுக் கேட்டனர். இந்தச் சூழ்நிலையில் மற்றொரு ஆலயத்தின் மூப்பர் ஜிசு மராண்டி காவல் நிலையத்துக்கு வந்து சஹால் டுடு நிரபராதி என்றும் அவர்மீது போடப்பட்டக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்றும் உறுதிப் படக் கூறினார். மட்டுமல்லாமல், ஒரு ரூபாய் கூடக் கொடுக்காமல் விடுவிக்கப்பட தேவன் உதவிச் செய்தார். நம்முடைய ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர் நீதியையும் நியாயத்தையும் தமது பிள்ளைகளுக்குச் செய்தார். தேவனுக்கே மகிமை!*

## 7 அக்டோபர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. விஜய் பிரசன்னா ஐசக்
திருமதி. சரோஜினி நர்சாரி

# ராஜஸ்தான்

### அஜீத்கார்:
**ஜெய்பீர் சிங் & தேவி ராணி**

**துதிக்க:** 100 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஒரு வேதாகமம் மற்றும் 40 புதிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. தௌலத்புரா, கர்டாக் நெக் மற்றும் செப்ராக்விர் கிராமங்களில் நற்செய்தி புதிதாக அறிவிக்கப்பட்டது. கௌலத்புரா கிராமத்தைச் சேர்ந்த கீதா நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகின்றார். ரஜீன் மற்றும் மகோதர் புதிய தொடர்பாளர்களாகக் கிடைத்துள்ளனர். அஸ்புரா கிராமத்தில் சத்சங் கூடுகை நடைபெற்றது. உபவாச ஜெபத்தின் வாயிலாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்து கீதா விடுதலைப் பெற்றார். அன்னு மற்றும் பிரியா ஆகியோர் குறைவான இரத்த பிளேட்லெட் அணுக்களிலிருந்து சுகம் பெற்று அவர்களின் பிளேட்லெட் அணுக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கீதாவின் குடும்பம் இயேசுவை ஏற்றுக்கொள்ள; முதுகு தண்டுவடப் பிரச்சினையினால் பெலவீன மடைந்து தன் உடலை சமநிலையில் வைத்துக் கொள்ள சிரமப்படும் சரிதா பலவீனம் நீங்கி குணமடைய; நமது புதிய தொடர்பாளர்களான ராஜினி மற்றும் மகேந்தர் குடும்பங்களிலுள்ளப் பிரச்சினைகளுக்கு கர்த்தரின் வாயிலாக தீர்வு காண; பூல்வாட்டியின் கணவரும் மாமியாரும் கர்த்தரை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### ஸ்ரீ கங்காநகர்:
**போடார் அம்ருத்பாய்**
**& சுவேரா மார்த்தா**

**துதிக்க:** நான்கு கிராமங்களில் 144 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 5 புதிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. இருவர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். SSB,16S ஆகிய இடங்களில் வேதாகம வகுப்புகள் நடத்தப்பட்டன. முராரி குடியிருப்பில் பின்தொடர் ஊழியம் நிறைவேற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** துகார் குடியிருப்பில் வசிக்கும் மஞ்சு இயேசுவை ஏற்றுக்கொள்ள; நற்செய்திக்குச் செவிமடுக்கின்ற சந்து, ரூபாஜி, அங்ரேஜ் மற்றும் அக்னம் இரட்சிக்கப்பட; சபை மூப்பர் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறி நற்செய்தி ஊழியத்திற்கு உதவிச் செய்ய; மதுப் பழக்கத்திற்கு அடிமையாயிருக்கின்ற சந்தீப், சந்து, நரேஷ் ஆகியோர் விடுவிக்கப்பட, பாதம்பூர் கிராமத்தைச் சார்ந்த பாலா புற்றுநோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

# 8 அக்டோபர்
ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. பால் பியர்சன் பிரின்ஸ் J.

## சாம்ரானியா:
### மீனுகா அடப்பா மேத்யூ & ராம்புரம் பெடாக்கா ஆஷா

**துதிக்க:** கடந்த மாத ஊழியத்தில் பரேலா, பீல், பிலாலா மக்கள் மத்தியில் ஊழியம் நிறைவேற்றப்பட்டது. அதில் 600 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கபட்டதற்காகவும், 53 பேர் மறுமலர்ச்சிப் பெற்ற வாழ்வுக்குள் வந்து மந்தையில் இணைந்ததற்காகவும், 60 புதிய ஏற்பாடுகளை வாங்கி சென்றோருக்காகவும்; லுகாரி கிராமத்தில் தேசத்திற்கானச் சிறப்பு ஜெபமும், சுதந்திர தினத்தைக் கொண்டாடிடவும் தேவன் பாராட்டிய கிருபைக்காக; பிசாசின் பிடியிலிருந்து ராஜுவும், ஒவ்வாமை பிரச்சினையிலிருந்து கரினாவும் சுகம் பெற்றனர். கைலாஷ் மனரீதியானப் பிரச்சினையை மேற்கொள்ள தேவன் பாராட்டின கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லுகாரி கிராமத்தில் கூடி ஆராதிக்க இடத்தட்டுபாடு நீங்கி, விரைவில் ஆலயம் கட்டப்பட்டு, அநேகர் கூடி ஆராதிக்கவும்; ஊழியத்தில் வாஞ்சைக் காட்டும் கௌதம், பல்ராம் கைலாஷ் ஆகியோர் அவர்கள் மக்கள் மத்தியில் அர்ப்பணிப்போடு தேவனுக்காகப் பணியாற்றத் தங்களை ஒப்புக்கொடுக்க; கமலி அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; கர்ப்பப்பைப் பிரச்சினையிலிருக்கும் நான்டோடியின் சுகத்திற்காக; கோரி சாக்ரி சபை இன்னும் அதிகமாக தேவனுடைய வார்த்தையில் வளர; விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; படி சித்கரி &டெரி கிராம விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை பகிரங்கமாக அறிக்கையிட ஜெபிப்போம்.

## ஆல்வர்:
### பங்காரு நாயுடு கர்ரி & ஈமண்டி அனுராதா

**துதிக்க:** 6 பேர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதற்காக; தேவ இரக்கத்தினால் சந்திர சேகர் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக; டிங்கி & ராஜ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற்றதற்காக; நிக்கேச்சி & நக்நோல் ஆலயத்திற்கு அநேக புதிய ஆத்து மாக்கள் எதிர்ப்பின் மத்தியிலும் பங்கு பெறுவதற்காக; ராம்ஸ்வரக் கிராமத்தில் நடத்தப்பட்ட வெளிப்புற ஊழியத் திற்காக; உபவாச ஜெபத்தில் அநேக அற்புதங்களை விசுவாசிகள் மத்தியில் தேவன் செய்ததற்காக; 16 கிராமங்களில் நடைபெறும் ஜெபக்கூடுகையில் அநேக வாலிபர்கள் வாஞ்சையோடு கலந்து தேவாசீர்வாதம் பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆல்வர் பணித்தளத்தில் அனைத்து விசுவாசிகளும் விசுவாசத்தில் உறுதியாயிருக்க; சுகவீனமாயிருக்கும் சந்தோனி, சோனு, பாபிலி ஆகியோரின் சுகத்திற்காக; ஜாத்வா சமுதாய மக்கள் விசுவாசத்தில் உறுதியாக நிற்க; குருத்துவார் சமுதாய பாக்கியரதி இயேசுவை அறியவும், ராஜ்பூத் மக்களின் விசுவாசத்திற்கு எதிராகச் செயல்படும் ஆவியைக் கட்டவும் திருச் சபைக்கு வருவோரைத் தடைச் செய்யா திருக்கவும்; காந்திகா கிராமத்தில் ஆலயம் கட்ட இடம் தருவதாக வாக்குகொடுத்த ஜெய்ராமுக்காக ஜெபிப்போம்.

## 9 அக்டோபர்
திங்கள்

### கைர்த்தல்:
**செல்வராஜ் & செல்வம்மாள்**

**துதிக்க:** 15 கிராமங்களில் எந்தத் தடையுமின்றி சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; மஜிரா கிராமத்தில் சத்சங் கூடுகை நடத்தப்பட்டதற்காக; 7 சிறுவர் நிகழ்ச்சியிலும் அநேக குழந்தைகள் பங்குபெற்றதற்காக; சிறுவர்கள் இயேசுகிறிஸ்துவை அறிந்து வருவதற்காக; பிகில் & சாது ஆகியோரை இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டீட்டா கிராம வீட்டு ஆராதனையில் விசுவாசிகள் விசுவாசத்தில் வளர்ச்சி காண; சிறுவர், பெண்கள் மற்றும் வாலிபர் கூடுகையில் பங்கு பெறுவோர் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தில் வளர்ந்தேற; புலம்பெயர்ந்து வேலைக்காக வெளியிடங்களுக்குச் சென்ற வாலிபர்கள் விசுவாச வாழ்வில் வளர; தலையில் அறுவை சிகிச்சை செய்து சுகம் பெற்று வரும் புதிய விசுவாசி பூஜாவுக்காக ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்
### பஸ்தி: பும்சோன்சின் & லுன்சிங்

**துதிக்க:** இரு கிராமங்களில் 50 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 8 வேதாகம வகுப்புகள், இரண்டு வெளிப்புற ஊழியங்கள், ஒரு தேடுவோர் முகாம் மற்றும் விசுவாசிகளுக்கான ஒரு கூடுகையும் நடைபெற்றன. தேவபார கிராமத்தில் நடைபெற்ற ஆத்தும ஆதாயக் கூடுகையின் ஆராதனையிலும் புதிய நபர்களைக் கர்த்தர் கொண்டு வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு செவிமடுத்து, ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்கின்ற ஹரியோம் மற்றும் முனி ராவ் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ஜகத் மஜாவா கிராமத்தில் ராம்விரிஷ் குடும்பத்தினர் மட்டுமே கிறிஸ்தவர்கள். இந்து கோயில் கட்ட தங்கள் நிலத்தைக் கொடுக்க மறுத்ததற்காக அவர்களை அடித்து உபத்திரவப்படுத்துகின்றவர்களைக் கர்த்தர் சந்திக்க; இத்தாக்குதலில் காயமடைந்துள்ள ராம்விரிஷின் மனைவிக்கும் மகளுக்கும் கர்த்தர் சுகத்தைக் கொடுத்து உபத்திரவத்தின் மத்தியில் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; படுத்தப்படுக்கையிலிருக்கும் சுமித்ரா சுகம் பெறவும், விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள அவரது கணவர் மீண்டுமாக விசுவாசத்திற்குள் வரவும் ஜெபிப்போம்.

### எண்ணில்லாத நன்மைகள்:

*உத்தரப் பிரதேசத்திலுள்ள தலபட கிராமத்தைச் சேர்ந்தவர் திருமதி. பார்வதி முண்டா சமீபத்தில் ஆண்டவரை ஏற்றுக்கொண்டவர். மூளை மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட அவர் அதிக மழையின் காரணமாக ஆற்றைக் கடக்க முடியாமல் இரண்டு நாட்களுக்குப் பின்பு மருத்துவமனைக்குக் கொண்டுச் செல்லப்பட்டார். இருப்பினும் நான்கு நாட்களுக்குப் பிறகு அவர் உடல்நிலை மேலும் மோசமான நிலைமையிலும் கடுமையான மன உளைச்சலிலும் அவர் கத்த ஆரம்பித்தார். இதையடுத்து கியோஞ்சாரிலுள்ள மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவரைக் காப்பாற்ற இயலாது, மூன்று நாட்கள் மட்டுமே உயிரோடு இருப்பார் என்றும் மருத்துவர்கள் கூறினர். தொடர்ந்து விசுவாசிகளும், ஊழியர்களும் ஜெபித்த பொழுது ஆறாவது நாள் அதிகாலை 3 மணியளவில் நம்ப முடியாத அளவில் தேவன் அற்புதமாக பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இன்று திருமதி. பார்வதி முண்டா பூரணக் குணமடைந்துள்ளார். நம்முடைய ஜெபத்தைக் கேட்டு அற்புத சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!*

# 10 அக்டோபர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சித்ரா பொன்னுசாமி
திரு. ஹரிபாபு குந்த்ரா
திரு. சாந்து மராண்டி

## ஜின்ஜக்:

**சமரேந்திர சிங் & சுஸ்மித்தா**

**துதிக்க:** 3 கிராமங்களில் 300 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 2 நபர்கள் விசுவாசிகளாகி கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 7 வேதாகமங்களும் 25 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டன. முதேரா கிராமத்தில் சத்சங் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. போலா நகர் ஆலயத்தில் 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகை நடைபெற்றது. உபவாச ஜெபத்தின்போது, அசுத்த ஆவியால் கட்டுண்டிருந்த அஞ்சுதேவி, கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டார். கடந்த 3 ஆண்டுகளாக தூங்கமுடியாம லிருந்த சீதாதேவி, உபவாச ஜெபத்தில் பங்கு பெற்றபின் நன்றாகத் தூங்குகின்றார். மதராபூர் கிராமத்தில் தடைப்பட்டிருந்த ஆலய ஆராதனை மீண்டுமாகத் துவங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மங்கள்பூர் கிராமத்திலுள்ள அஞ்சுதேவியின் குடும்பம் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வர; முபாரக்பர், பரத்வால், பாபன்பூர் மற்றும் பம்ஹெயா கிராமங்களில் ஆலய ஆராதனைகளில் குறைவான எண்ணிக்கையில் விசுவாசிகள் வருகின்றனர். பின்மாற்ற மடைந்துள்ள விசுவாசிகள் மீண்டுமாக விசுவாசத்திற்குள் வர; சனந்தர்பூரில் பஞ்சாரா இனமக்கள் மற்றும் சாஹர்பூரில் ஜோகி மக்கள் தங்கள் விசுவாசத்தில் கர்த்தருக்குள் உறுதி யாயிருக்க; நுரையீரல் பாதிப்பிலிருந்து ரசுலாபாத் கிராமத்தைச் சேர்ந்த பங்கேலால் விரைவில் சுகம் பெற; இளம் விசுவாசிகளுக்குத் தகுந்த வேலை கிடைக்க; மனதளவில் பாதிக்கப்பட்டுள்ள அன்தா மற்றும் ஷேபா தெளிவான மனநிலையைப்பெற; வாய்ப்புற்றுநோயிலிருந்து புன்டல் சுகம் பெற; அசுத்த ஆவியின் பிடியிலிருக்கும் அஞ்சு மற்றும் அஞ்லி விடுவிக்கப்பட்டு, விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## ரணியா:

**மாங்வெய் ஃபோம் & நிஷா**

**துதிக்க:** 60 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஒரு வேதாகமமும், 20 புதிய ஏற்பாடுகளும் வழங்கப்பட்டன. 3 நாட்கள் தேசிய உபவாச ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. 5 இடங்களில் வேதபாட வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பால் சமுதாயத்தைச் சார்ந்த பலர் புதிதாக ஆலய ஆராதனையில் பங்கேற்கின்றனர். அசுத்த ஆவியின் கட்டுகளில் இருந்த பாரா கிராமத்தைச் சேர்ந்த மீர்னா விடுதலைப் பெற்றார். திலிப் பால் அதிக உற்சாகத்துடன் பிறருக்கு நற்செய்தியை அறிவித்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தியைக் கேட்ட 60 பேரும் சுவிசேஷத்திற்குச் செவி மடுத்து தேவ மந்தையில் இணைய; பிரையான்சி பால் அசுத்த ஆவியின் பிடியி லிருந்து விடுவிக்கப்பட; சத்பால் மனநிலை பாதிப்பிலிருந்து சுகம் பெறவும், ராஜாராம் எந்தவொரு உதவியுமின்றி தானாக நடக்கவும் ஜெபிப்போம்.

## 11 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேரி புஷ்பம் டேனியல்
திரு. கஜன் சம்பிரமரி

# மத்தியப் பிரதேசம்

## தூல்கோட்:

**ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்**

**துதிக்க:** நான்கு கிராமங்களில் 171 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 13 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். காடி கிராமத்தில் புதிய சபை ஆரம்பிக்கப்பட்டது. 2 வேதாகமங்கள் வழங்கப்பட்டன. தாண்டா மற்றும் சிக்லியா கிராமங்களில் இரு விசேஷித்தக் கூடுகைகள் நடத்தப்பட்டன. 3 மாதங்களாக கடுமையான வாந்தியினால் அவதிப்பட்ட சர்பாத் கிராமவாசி லலிதா ஜெபத்தின் வாயிலாக சுகம் பெற்றார். சாந்திபாயின் வீட்டிற்குள் அடிக்கடி நுழைய முயன்ற ஒரு பாம்பு, சபையினரின் ஜெபத்தின் வாயிலாக அந்த வீட்டிற்கு வரவிடாமல் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியில் அதிகமாக அவதிப்படும் 15 வயது நிர்மலா விடுதலைப் பெற; தேள் கொட்டுவது போன்று சுத்திக்கு அடிக்கடி உணர்வு ஏற்படுவதால் தலைமுதல் பாதம்வரை அதிக வலி ஏற்படுகின்றது. இந்நிலையிலிருந்து சுத்தி சுகம் பெற; வயிறு வீங்குவதால் அடிக்கடி மயங்கி விழும் கமாலிபாய் சுகம் பெற; கர்த்தருக்குள் வளருவதற்குப் பதிலாக அரசியலில் அதிக ஈடுபாடு காட்டும் ஜலர்வான் கிராமத்தைச் சேர்ந்த ஜம்முனாலா மனந்திரும்ப; கடந்த ஆறுமாதங்களாகத் தீராத வயிற்றுப் போக்கினால் உபாதைப்படும் நான்சிங் சுகம் பெற ஜெபிப்போம்.

## நிவாலி:

**சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி**

**துதிக்க:** 3 கிராமங்களில் 216 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஐந்து புதிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. 2 இடங்களில் இரவுக்கூடுகைகள் நடத்தப்பட்டன. 7 இடங்களில் வெளிப்புற ஊழியங்கள் நிறைவேற்றப்பட்டன. 2 இடங்களில் திரைப்பட ஊழியம் நிறைவேற்றப்பட்டது. விசுவாசிகளின் உதவியுடன் 63 இடங்களில் பஜனை நிகழ்வுகள் நடத்தப்பட்டன. கோத்லியாபானி கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணி முடியும் நிலையில் உள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தற்காலிகமாக ஆலயம் அமைக்க ஏதுவாக கிராமத்தலைவர் தடையில்லாமல் சான்றிதழ் வழங்க; நக்கதிரணி மற்றும் பாலஸ்மத் திருச்சபைகளில் விசுவாசிகள் அதிகமாக பங்கேற்க; கோத்லியபானி ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் முடிக்கப்பட ஜெபிப்போம்.

## 12 அக்டோபர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சோன்பு சிங்சன் G.

### பாக்லி & உதய்நகர்:
**டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா**

**துதிக்க:** இரவுக்கூடுகையில் நமது சுதேச ஊழியர் குடும்பத்தை மத அடிப்படை வாதிகள் திட்டமிட்டு செய்ய நினைத்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க உதவினதற்காக; கோனத் பகுதியில் வெற்றிகரமாக நடைபெற்ற வெளிப்புற ஊழியங்களுக்காக; திருமணமாகி 4 ஆண்டுகளுக்குப்பின் கவிதாவிற்கு தேவன் கொடுத்த ஆண் பிள்ளைக்காக; அனைத்து ஆராதனைகளிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிற பெண்கள் மற்றும் சிறுவர் கூடுகைகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரமேஷ் என்பவர் குடித்துவிட்டு மனைவியைத் துன்புறுத்துவதுடன் நமது ஊழியத்திலும் எதிர்ப்பு தெரிவிக்கிற அவர் மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கையிட; மத அடிப்படை வாதிகள் காவல் துறையின் துணையோடு பொய்யானக் காரியங்களைச் செய்து ஊழியத்திற்கு தடையாகச் செயல்படுவோருக்காக; சிறையிலிருக்கிற 12 சுதேச ஊழியர்களும், 4 விசுவாசிகளும் விரைவில் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## பீஹார்

### முரளிகன்ஜ்: ஜாண் எம்.(ஓய்வு) & செலினா ஜாய்ஸ்

**துதிக்க:** தம்சைனா & பகவன்பூர் கிராம ஆராதனை குழுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதற்காக; சஞ்சுவ்தேவி பித்தப்பை பிரச்சினை ஜெபத்தினாலும், அறுவை சிகிச்சையினாலும் சுகம் பெற்றதற்காக; ரேவதிதேவி கால்வலி பிரச்சினையிலிருந்தும், ஊழியர் செலினா ஜாய்க்கு வைரல் காய்ச்சலிலிருந்தும் தேவன் கொடுத்த அற்புத சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும் மற்றும் கனிநிறை வாழ்விற்காகவும் திட்டமிட்டுள்ள அனைத்துக் கூடுகைகளும் தடையின்றி நடக்க; தண்ணீர் பற்றாக்குறையில் வாடும் மக்களுக்கு தேவன் ஆசீர்வாதமான மழையை பொழிந்தருள; விசுவாசிகள் ஆலய ஆராதனைகளிலும், ஜெபக் கூடுகைகளிலும் தவறாமல் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைந்து சாட்சியாக வாழ்ந்திடவும் ஜெபிப்போம்.

### *காணாமல் போன மகன்!*

*மத்தியப் பிரதேசத்தின் துல்கோட் பணித்தளத்திலுள்ள கவுண்டி கிராமத்தில் வசிக்கும் 30 வயது நங்காரம், கடந்த காலத்தில் ஆண்டவருக்குப் பயந்து விசுவாசியாக இருந்தும் காலப்போக்கில் அவர் படிப்படியாக தனது விசுவாசத்திலிருந்து விலகிச்சென்றார். நீண்ட நாட்களாக வலிப்பு நோயினால் அவதிப்பட்டு வந்த அவர், சமீபத்தில் உடல் மோசமான சூழ்நிலைக்குப்போய் சாப்பிடவோ, பேசவோ முடியாமல் படுத்தப்படுக்கையாகி விட்டார். அவருடைய குடும்பத்தினர் மருத்துவமனை மற்றும் மந்திரவாதிகளைத் தேடி சென்றனர். எதுவுமே அவருக்குப் பலன் கொடுக்கவில்லை. ஒரு புதன்கிழமை இரவு நங்காராமின் குடும்பத்தினர் அவரை ஜெபத்திற்காக 'தாண்டா' தேவாலயத்துக்கு அழைத்து வந்தனர், சபையினரின் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் அவரைத் தொட்டு அவருக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இன்று அவர் உடல் ரீதியாக சுகத்தைப் பெற்று, ஆவிக்குரிய வாழ்வில் மனந்திரும்பி விசுவாசியாகவும் வாழ்ந்து வருகிறார். அல்லேலூயா!*

# 13 அக்டோபர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. அனுஷ் பீட்டர் ஜெபராஜ்
திருமதி. தெபோராள் விஜயராணி எட்வர்ட்

## ஜார்க்கண்ட்

### படிட்டோலா:

**மிர்ஜியோ கிஸ்கு &**
**செலினா ஹன்ஸ்தக்**

**துதிக்க:** 13 கிராமங்களில் 1030 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 7 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். 5 வேதாகமங்களும் 8 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டன. 9 விசுவாசிகளுக்கான முகாம்கள், 8 பெண்கள் முகாம்கள், 10 இளைஞர் முகாம்கள், 4 சிறுவர்களுக்கான முகாம்கள் நடைபெற்றன. இரு சக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்ததால் எலும்பு முறிந்து அவதிப்படும் சபைமூப்பர் மதாரோம்பூரைச் சேர்ந்த பாபுதன் சுகம் பெற்றார். மூளை மலேரியாவிலிருந்து சபை மூப்பர் ரபேல் சோரேன் சுகம் பெற்றார். ஜெபம் மற்றும் மருத்துவ சிகிச்சைவாயிலாக தெராலா டுடு முகபக்கவாதத்திலிருந்து குணமடைந்தார். ரோதா ஆலயத்தில் இளைஞர்களுக்காக வேதபாட வகுப்பு நடத்தப்பட்டது. பெரிய நச்சுப் பாம்பிடமிருந்து பவுலூஸ் முர்முவைக் கர்த்தர் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாத நோயிலிருந்து சபை மூப்பர் தபிரான் மராண்டி சுகம் பெற; சுதேச ஊழியர் சக்னல் டுடுவின் மகன் ஸ்டீபன் டுடு தன் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிய; நற்செய்திக்கு செவிகொடுத்த லக்கிப்பூர், பப்தன்ட், சோன்முனி கிராமத்தினர் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து இயேசுவை ஏற்றுக்கொள்ள; விசுவாசிகளிடமிருந்து பலதாரத் திருமணம் முற்றிலும் நீக்கப்பட; சிறுநீரகப் பிரச்சினையிலிருந்து பிஷ்பா சோரேன் நலம் பெற; ரோதா மற்றும் லோகய்ப் பகுதிகளில் பரவலாகக் காணப்படும் வயிற்றுப்போக்கு நோயிலிருந்து நமது விசுவாசிகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

### பகையா:

**ஜெபக்குமார் & பொன்லதா**

**துதிக்க:** பல ஆண்டுகளுக்குப் பின்னர் பைசா கிராமத்தில் ஆலயக்கட்டு மானப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 4 ஆலயங்களில் 3 நாட்கள் உபவாச ஜெபம் நடைபெற்றது. சுதேச ஊழியர்கள் மற்றும் டீக்கன்களுக்கான சிறப்புப் பயிற்சியை அருட்திரு. சுதாகரன் மற்றும் அருட்திரு. ஜேக்கப் ஞானபண்டிதன் ஆகியோரால் நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தியைக் கேட்ட பலர் பல்வேறு காரணங்களுக்காகப் பின்வாங்குகின்றனர். இவர்கள் கிறிஸ்துவில் உறுதியாய் வேரூன்ற; பணித்தள அனுபவங்களை மும்பையிலும் பூனேயிலும் பகிர்ந்துகொள்ள ஆயத்தப்படும் குழுவினரின் ஊழியம் வெற்றிகரமாய் அமைய; கை எலும்பு முறிவினால் அவதிப்படும் மிஷனரியின் மகள் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## 14 அக்டோபர்
சனி

### லால்மட்டியா:
**அமரேந்திரன் & சுவேதா**

**துதிக்க:** ஆறு இரவுக்கூடுகைகள், 4 திரைப்பட ஊழியங்கள், 7 கிராமங்களில் நற்செய்தி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் ஆகியவற்றின் வாயிலாக 446 மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 6 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். மற்றொரு குடும்பம் கிறிஸ்தவ விசுவாசத் திற்குள் வர ஆயத்தமாயுள்ளது. தும்ரியா கிராமத்தில் நற்செய்திக்குத் திறந்த வாசல் உருவாகியுள்ளது; அங்கே வந்து ஜெபிக்கும்படி இரு குடும்பத்தினர் மிஷனரிகளை அணுகியுள்ளனர். வகுப்பறையில் பிந்து சோரேன் அசுத்த ஆவியால் தாக்கப்பட்டபோது, நமது விசுவாசி ஜெபித்ததால் கர்த்தர் விடுதலை கொடுத்தார். பால்கோமி, நாராயண்பூர் கிராமங்களில்கால் நடைகளைத் தாக்கும் நோயிலிருந்து கர்த்தர் விசுவாசிகளின் கால் நடைகளைக் காத்துக்கொண்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாதார்கமா, போதயாஹட் மற்றும் காகெல்கோன் ஆகிய பகுதி களுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல அர்ப்பணிப்புள்ள தன்னார்வலர்கள் கிடைக்க; மோகபதான் கிராமத்தினர் கர்த்தரை ஏற்றுக்கொள்ள; பியோராம் கிராமத்தில் நற்செய்தியை அறிவிப்ப தற்கான சுமூகமான சூழல் உருவாக; ராம்கோல் இளைஞர்குழு பிற கிராமங்களுக்கு நற்செய்தியை எடுத்துச்செல்ல எடுக்கும் முயற்சிகள் வெற்றிகரமாக அமைய; கர்த்தருடைய அன்பை உணர்ந்து கொண்ட 5 குடும்பங்களும் தைரியமாக தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; பாபுஜி மற்றும் இட்வாரி புற்றுநோயிலிருந்து குணமாக ஜெபிப்போம்.

### யேகோவாயீரே சிறுவர் விடுதி &போடுவா விடுதி:
**சோன்பு சிங்சன் & டிங்நய்நேங்**

**துதிக்க:** நமது விடுதி சிறுவர்கள் காலாண்டு தேர்வு எழுதிமுடிக்க தேவன் கிருபை கொடுத்ததற்காக; கடந்த மாதம் கண் வலி பாதிப்பினால் அவதியுற்ற அனைத்து சிறுவர்களுக்கும் கிடைக்கப்பெற்ற சுகத்திற்காக; சிறுவர் திருமணம், பாலுணர்வுக் குற்றம் மற்றும் வேலைவாய்ப்பிற்கான கருத்தரங்கு சிறப்பாக நடைப்பெற்று அநேகர் பயன்பெற்றதற்காக; இந்த மாதம் முழுவதும் ஒவ்வொரு சிறுவர்களையும், அவர்கள் குடும்பங்களையும், நம்முடைய உள்ளூர் ஊழியர் குடும்பங்கள் மற்றும் ஊழியர் குடும்பங்களில் தேவ பாதுகாப்பு இருந்ததற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** காசநோயினால் அவதியுறும் பாம்னாமாடி, விடுதியிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறான், அவனின் பரிபூரண சுகத் திற்காக; 12-ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு நல்ல கல்லூரியில் இட வாய்ப்புக் கிடைக்க, மழைக்காலங்களில் தேவையான தேவ பாதுகாப்பிற்காகவும், விஷப்பூச்சிகள், மின்சார தடையிலிருந்து பாதுகாக்க, நெல் அறுவடைக்குத் தேவையான மழையை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## 15 அக்டோபர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாகி சதீஷ்

### தம்னி:
**ஜாண்பால் ஹாரிஸ் & விமலா டெய்சி**

**துதிக்க:** 131 பேர் புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டதற்காக; 56 வீட்டு ஜெபக்கூடுகைகள் நடைபெற்றதற்காக; ஆர்வத்துடன் பங்குபெறும் புசுருகூடியா சேகர விசுவாசிகள் அருகாமையில் உள்ளோருக்கு சுவிசேஷம் அறிவித்து வருவதற்காக; டொகோரா கிராமத் தலைவரின் சுகவீனத்தில் சுகம் பெற்றதினால் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருவதற்காக; தானியேல் பாம்புக்கடியிலிருந்து அற்புதமாய் பாதுகாக்கப்பட்டதற்காக; மரியத்திற்கு தேவன் கொடுத்த சுகப்பிரசவத்திற்காக; பில்லி சூனியக் கட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட ஜன்டா பகடியாவிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்வாங்கி போயிருக்கும் பெகலருடியா கிராம விசுவாசிகளுக்காக; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் முற்றேரி, டெகுபேடா, கும்ரிகக்கி, கெருகூடியா, மற்றும் பெடோகடி கிராம மக்களுக்காக; அனைத்து ஆராதனைக்குழுக்களிலும் பிரதி புதன்கிழமை தோறும் நடைபெறும் 12 சிறு ஜெபக்குழுக்களுக்காக; ஞாயிறுதோறும் நடைபெறும் ஆராதனைகளில் கலந்துகொள்ளும் காட்டிலி கிராம மக்களுக்காக ஜெபிப்போம்.

### ஹன்ஸ்டிகா:
**செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி**

**துதிக்க:** சுவிசேஷத்திற்கு 9 புதிய கிராமங்களில் கிடைக்கப்பெற்ற திறந்தவாசலுக்காக; 1900 பேர் சுவிசேஷத்தை வாஞ்சையாய் கேட்டதற்காக; 5 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டதற்காக; ஆவிக்குரியக் கூடுகையில் கலந்து கொண்ட 18 பேருக்காக, வேலை நாட்களையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்று கொண்டதற்காக; ஆசீர்வாதமான பின்மாரி மழையை தேவன் அவர்களில் கொடுத்து நல்ல அறுவடை கிடைக்கப் பெற்றதற்காக; நமது சுதேச ஊழியர் மூலம் 2 கிராமங்களில் இரவு கூட்டங்கள் நடத்தப்பட்டதற்காகவும், அதில் விசுவாசிகள் விசுவாசத்திற்குள் வராத அநேகர் பங்கு பெற்றதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசியான துலட் ஹம்ப்ரோம் தீய ஆவியின் பிடியிலும், மற்ற சபை உறுப்பினர்களைத் தவறான வார்த்தைகளால் திட்டியதிலும் மற்றும் பயத்தின் பிடியிலுமிருந்து விடுவிக்கப்பட, சபை மூப்பரின் மூத்த மகன் வலிப்பு நோயிலிருந்து குணமடைய; சிடாசாலின் மனைவி புற்றுநோயிலிருந்து சுகம்பெற; சுதேச ஊழியர்கள் உற்சாகப்படுத்தப்படவும், ஊழியத்தை அர்ப்பணிப்போடு செய்யவும் ஜெபிப்போம்.

## 16 அக்டோபர்
திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. விஜயராணி ரூபன் ரவி
திரு. சுச்சாவோ S.

### ஜகன்நாத்பூர்:
**பாசுதேவ் மால்தோ & பசந்தி**

**துதிக்க:** 4 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, 1144 பேர் நற்செய்தியைக் கேட்டு கொண்டதற்காக, அதில் 21 பேர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டனர். 9 வேதாகமமும், 10 புதிய ஏற்பாடுகளும் வாஞ்சையோடு வாங்கிச் சென்றதற்காக, சரபில் மற்றும் கிட்டிகொண்டு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது அநேக வியாதியஸ்தர்கள் ஜெபித்து சுகம் பெற முன்வந்ததற்காக; 2 நாட்கள் வாலிப தலைவர் பயிற்சி ஜம்நல்லி ஆராதனை குழுவில் நடத்தப்பட்டதற்காக; தற்கொலை எண்ணத்திலிருந்து சான்காராமை பாதுகாத்து இருளின் அந்தகாரத்திலிருந்து விடுவித்து வீடுதிரும்பச் செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹெசபலி கிராமத்தில் வெளிப்புற ஊழியமும், ஜம்நல்லி சேகரத்தின் விசுவாசிகளுக்கான முகாம் நடத்தப்பட்டு அதன் நோக்கம் நிறைவேற; ஜெய்பூர் ரெபேட்லோவா மற்றும் ஜம்நல்லி கிராம விசுவாசிகள் விசுவாசத்தில் வளரவும், சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும் அநேக விதமான பயிற்சி முகாம்களை நடத்த திட்டமிட்டுள்ளதற்காக; புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் சிரேசை மற்றும் கடகேஷ்னா இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ள; பிரியா, சுக்மதி, சுமித்ரா மற்றும் காலுராம் ஆகியோரின் சுகவீனங்கள் மாற ஜெபிப்போம்.

### கெய்ராஜோடி:
**சுச்சௌ & காம்புங் தாபா**

**துதிக்க:** புதிதாக 13 பேர் விசுவாசத்தை அறிக்கை செய்து தேவ மந்தையில் இணைந்தனர். சாமுவேல், மரியம், அக்குயா, சலோமி யாக்குப், பாம்ரி, சர்ஜி ஆகியோருக்கு ஜெபத்தினால் தேவன் கொடுத்த சுகத்திற்காக; சுனில் மற்றும் மனீஸ் குடும்பம் குழந்தை பாக்கியம் பெற்றதற்காக; ஒரு ஆண்டிற்கு பின்பு ஆரம்பிக்கப்பட்ட சுர்லா கிராம ஆராதனைக்காக, சுனிதாவை தேள் கொட்டியபோதும் தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருச்சபை தலைவர்களான, டர்மா, ராபின் மற்றும் ஜோகன் ஆராதனை குழுக்களை ஆவிக்குரிய வழியில் வல்லமையாய் நடத்தி செல்ல; ஜோகன் மால்தோ ஆஸ்துமாவிலிருந்து பரிபூரண சுகம் பெற; ஆலய மூப்பரோடுள்ள முரன்பாட்டிற்காக; ஒழுங்காக ஆலயம் வராமலிருக்கும் டோக்ரியா மற்றும் டோலோ ஆலய ஆராதனைகளில் பங்கெடுத்து, கிறிஸ்துவிடம் ஐக்கியப்பட; கொல்லி கோடா ஆலயம் பழுதுபார்க்கும் பணி விரைவில் முடிவடைந்து ஆராதனைத் தொடர்ந்து நடைபெற; யாக்குப் குடிபழக்கத்திலிருந்து முற்றிலும் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## 17 அக்டோபர்
செவ்வாய்

### லிட்டிபாடா:
**எபினேசர் சாமுவேல் &**
**மேபல் ஃபிளாரன்ஸ்**

**துதிக்க:** 8 கிராமங்களில் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்ற 1153 பேருக்காக; 10 பேர் விசுவாசத்தை அறிக்கையிட்டு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்ததற்காக, குடலிறக்கத்திலிருந்து தீமோத்தேயுவிற்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக; நமது சுதேச ஊழியரின் மகன் பவுலினா காசநோயிலிருந்தும், வலிப்பு நோயிலிருந்தும் சுகம் பெற்று, ஓராண்டு இடைவெளிக்குப் பின்பு பள்ளி செல்லவும் உதவின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட; ராம்பூர் கிராமத்தில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வாஞ்சைக் காட்டும் 4 குடும்பத்தினருக்காக; பலவிதமான வியாதிகளில் கஷ்டப்படும் அவர்கள் சுகம் பெற; விசுவாசிகளுக்கு தங்கள் விவசாயத்தில் இந்த ஆண்டு அதிகமான அறுவடையைக் கிடைக்கப்பெற; அனைத்து ஆராதனைகளிலும் பங்கு பெறுவோரும் வைராக்கியமாய் தனித்தாள் ஊழியத்தில் ஈடுபட ஜெபிப்போம்.

### சுந்தர்பஹாடி:
**டேனியல் தனசிங் &**
**சுவிலா ஞானப்பூ**

**துதிக்க:** 16 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, 2700 பேர் சுவிசேஷத்தைக் கேட்டதற்காக; 8 பேர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக; நீனா, குலாபி, சுனில், தபித்தா ஆகியோர் பலவிதமான வியாதிகளிலிருந்து சுகம் பெற்றதற்காக; விசுவாசி அல்லாத சோனதி ஹன்ஸ்தா படுத்தப்படுக்கையாக நோய்வாய்ப்பட்டிருக்கையில் பலவித பூஜைகள் செய்தும் ஒன்றும் பலன் தரவில்லை. நமது சபை மூப்பர் ஜெபித்தபோது படுக்கையிலிருந்து அப்பெண் எழுந்து நடந்து சுகத்தைப் பெற்றுக்கொண்டாள், இன்று அவளுடைய குடும்பம் ஆலயத்திற்கு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாகவும், உண்மையாகவும் இருக்க; சுந்தர்பஹாடி, சரௌடி, மோகன்பூர், சாந்தனா மற்றும் திலைபாடா ஆராதனைக்குழுவை நடத்தி செல்ல தேவையான சபைத் தலைவர்கள் கிடைக்க; வியாதியின் கொடூரத்தில் அவதியுறும் ஜஸ்டின் அவர்களின் மூத்த மகனுக்காக; பீட்டா சோரேன் இடுப்பு எலும்பு பிரச்சினையிலிருந்து சுகம் பெற; மஞ்சள்காமாலையினால் தனது 8 வயது மகளை இழந்திருக்கும் ஆபிரகாம் டுடு குடும்பத்தின் ஆறுதலுக்காக; நடக்க முடியாமலிருக்கும் சுனிலுக்காகவும், பிசாசின் பிடியில் சிக்கி தவிக்கும் மாக்கு சோரேன் இரவு தூக்கமின்மையில் விடுதலையும் தேவ சமாதானமும் கிடைக்க; நமது ஊழியர் டேனியல் தனசிங் அவர்களின் இருதய வால்வின் இரத்த ஓட்டக் குறைவினால் ஏற்படும் நெஞ்சு வலியிலிருந்து பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## 18 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுமிதா தாஸ் மொஹன்தியர்

திரு. ஸ்ரீதர் மொபிடெனி

### அமலகாச்சி:
**கஜன் சம்பிரமரி & ரோஷிலா**

**துதிக்க:** விசுவாசிகள் ஞாயிறு ஆராதனையிலும் புதன்கிழமை ஜெபத்திலும் தவறாமல் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருவதற்காக; சில விசுவாசிகளுக்கு தேவன் கொடுத்த நல்ல அறுவடைக்காக; அநேக விசுவாசிகளின் ஜெபங்கள் கேட்கப்பட்டு, தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படும்படியாக பதில் கிடைத்துள்ளதற்காக; பொகரா மக்கள் விசுவாசத்தை பகிரங்கமாக அறிக்கைச் செய்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோடதெப்பு கிராமத்தில் வருகிற நாட்களில் நடக்கவிருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடும் நிகழ்வுக்காக; நோடி கிராமத்தில் ஆராதனை எந்த தடையுமின்றி நடக்க; பொகரா கிராமத்தில் ஆலயம் கட்டப்பட்டு அநேகர் வந்து ஆராதிக்க; கலப்புரா கிராம விசுவாசி கபில் குடும்பம் அநேக கிராம மக்களுக்கு முன்பு சாட்சியாக வாழ; கலுபரா, கொட்டா கெப்பு, பொகோரா மற்றும் மல்மிகொட்டா கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட; சாண்டன்கா ஆலயத்திற்குச் செல்ல சரியான பாதையும் பாலமும் அமைக்கப்பட; விசுவாசி ராஜுவின் மகன் வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

### பர்ஹர்வா:
**மல்லா வித்யாசாகர் &**
**தீபிகா ராணி பாணி**

**துதிக்க:** சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்து ஜோனா சுகம் பெற்றுள்ளார். ஸ்ரீராம் தேவி தொடர்ந்து இரத்தம் மாற்றுவதினாலும், ஜெபத்தினாலும் உயிர் வாழ்ந்து வருகிறார். நமது விசுவாசிகளின் பிள்ளைகள் தேவ் குமார் & பிரடாம் ஆகியோருக்கு நமது இயக்கத்தின் மூலம் கல்வி உதவி தொகை கிடைக்க பெற்றுள்ளததற்காக; அனுதேவி பாம்புக்கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக; குமனி ஆலய ஆராதனையில் தொடர்ந்து அநேகர் பங்கு பெறுவதற்காக ஆண்டவரை துதிப்போம்.

**ஜெபிக்க:** முகுல்ஷா சன்சாரியாதேவி & ஜெயஹரி தேவி ஆகியோர் தேவனால் சந்திக்கப்பட; காசநோயிலிருந்து குலாரி சுகம் பெற; வலிப்பு நோயிலிருந்து சாவித்திரி தேவி குணமடைய; இரகசிய கிறிஸ்தவரான கோதிலால் விசுவாசத்தில் பெலப்பட; கிறிஸ்தவ விசுவாசிகளை துன்புறுத்தும் பாண்டே மனந்திரும்ப; சிறுநீரகப்பிரச்சினையிலிருந்து கணேஷ் சுகமடைய ஜெபிப்போம்.

## 19 அக்டோபர்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஹவிலா பரமானந்த்

### புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி & பகல்நேர பராமரிப்பு மையம் - பந்தேனி :

**விக்டர் ஜெயசீலன் &**
**பிரின்சஸ் நகோமி;**
**கிப்ஜென் & மாவி; சாந்தினி; மெர்ஸி**

**துதிக்க:** டைட்டஸ், ஆனந்த் & பர்மா ஆகியோர் காய்ச்சலிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக; நமது மிஷனரி பிரின்சஸ் நகரும் இரயிலிருந்து விழாமல் பாதுகாக்கப்பட்டதற்காக; வைரல் காய்ச்சல் மற்றும் இருமலி லிருந்து 50 விடுதிப் பிள்ளைகள் சுகம் பெற்றுள்ளதற்காக; 12-ம் வகுப்பு படித்து முடித்த புஜாரி ஓராண்டு காலம் சிஷ்யா சொசைட்டியின் மூலம் பணிசெய்ய அனுப்பப்பட்டதற்காக; நமது முன்னாள் மாணவர்கள் நமது விடுதியில் வந்து தங்கி மாணவர்களுக்கு கடினமான பாடங்களைக் கற்றுகொடுப்பதற்காக; கூரை மற்றும் கழிவறைக் கட்ட அனுமதி கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அனைத்து உள்ளூர் ஆசிரியர்களுக்கும் திறமை வளர்ப்பு பயிற்சி வெற்றிகரமாக நடக்க; தகர கூரையினால் ஏற்படும் வெப்பத்திலிருந்து மாணவர்கள் பொறுத்துக்கொள்ளவும் மற்றும் மழையினால் சூடு தணிய; நெல் விதைத்த விவசாயிகளுக்குத் தேவையான மழை கிடைக்கவும் அதன் மூலம் விளைச்சல் அதிகரிக்க; விவசாயிகள் தங்கள் நம்பிக்கையை விடாமல் அறுவடைக்கு தயாராக புதிய மாணவர்கள் விடுதி மற்றும் பள்ளிக்கு வந்து சேர்ந்தவர்கள் வீட்டு நினைவு இல்லாமல் படிப்பில் கவனம் செலுத்த; ஆண்டுதோறும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால் விசால மான வகுப்புகள், கட்டிட தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### ஜாம்போனி:

**இப்ராயிம் மாலி & புரோசன்சிதா**

**துதிக்க:** புதிதாக 300 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; நமது சபை மூப்பர் மாதம்பெசுரா அவரே அருகிலுள்ள கிராமங்களில் நற்செய்தி அறிவித்து வருவதற்காக; கணேஷ் மற்றும் ட்ருபார்ஜ்புர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டிவருவதற்காக; பெக்கோ மற்றும் பெக்பூர் கிராமங்களில் வெளிப்புற ஊழியம் நிறைவேற்றப்பட்டதற்காக; சுவிசேஷ கைப்பிரதி வழங்கவும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும் தேவன் உதவினதற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு காட்டும் மோகினி, மலாயா, மக்காரா சோரே, பெனசோரே, சாந்தினி, கிக்குராம் மற்றும் பாபுலாலுக்காக, மசி, சிவ்மத் மற்றும் ஹன்ஸ்டா கிராம மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சில் காகார் மற்றும் ஜம்போனி கிராமத்தில் இரவு கூடுகைககள் நடத்தப்பட்டு விசுவாசிகளை விசுவாசத்தில் வளர்த்திட, மிஷனரிகளின் பிரயாண பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

## 20 அக்டோபர்
வெள்ளி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. மார்த்தா சோரேன்

### பாலுர்காட்:
**ஹரமோகன் & சூசம்மா**

**துதிக்க:** 10 கிராமத்தில் சுவிசேஷம் கேட்ட 350 பேருக்காக; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் சொனாட்டன், நிமை, பின்சர், சுனிராம், ராணி, முராங், முர்மம் பிஹறா & மோயினா ஆகியோர் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர்; 25 வயதான வாலிப பெண் அபோல் ஆராதனைக் கூட்டத்தை மிகவும் அர்த்தமுள்ள வழியில் நடத்தி செல்வ தற்காக; அறுவடைக் காலங்களிலும் விசுவாசிகள் ஆலய ஆராதனையில் ஆர்வத்துடன் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளிப்புற ஊழியங்களில் பாபுகிஸ்கா தொடர்ந்து ஈடுபட; பிசுநாத், மங்கள், சாம்பா & டிபிசார் ஆகியோர் விசுவாசத்தை பகிரங்கமாக அறிக்கையிட; பரிசுத்த ஆவியானவரின் தொடுதலை தேடுவோர் அனைவரும் பெற்றுக்கொண்டு, இரட்சிப்பின் வாழ்விற்குள் வர; அநேக ஆண்டுகளாக வாத நோயினால் கஷ்டப்படும் நமது சுதேச ஊழியர் சாம்சனுக்கு பூரண சுகம் கிடைக்க; பாலுர்காட் பணித்தள வெளிப்புற ஊழியத்தில் எழுப்புதல் உருவாக; நமது ஊழியரின் மனை விக்கு பித்தப்பை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பரிபூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### இட்டாஹார்:
**அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா**

**துதிக்க:** 4 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது; புதிதாக 9 இடங்களில் இரவு கூடுகைகள் நடத்தப்பட்டது; 9 இடங்களில் இயேசு திரைப்படமும் திரையிப்பட்டது, அதில் 210 பேர் நற்செய்தியை அறிந்து கொண்டதற்காக; மாசண்டாபா & சோனடிங்கு கிராமத்தில் 2 குடும்பங்கள் விசுவாச வாழ்விற்குள் வந்ததற்காக; ஜனுகெட்டு & சோடைங்கி கிராமத்தில் 23 வாலிபர்களை கிறிஸ்துவண்டை வழிநடத்த தேவன் உதவினார். அவர்கள் அனைவரும் விசுவாச வாழவில் வளர; ஜெபத்தினால் டமாலி மார்டிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக; சங்கர் மெய்ரா ஜெபத்தினால் சுகம் பெற்ற தற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** சுனிராம், டாலு ஹெம்ரோன், மிஸ்டு, லுக்கி, ரோனிஷா & டிக்பிஜய் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; பாஷார் ஆலயக்கட்டு மானப்பணி விரைவில் முடிக்கப்பட; கமாலிஜகல், டெக்கினால், மசாண்டாபா, டல்பீ, அலுவாடங்கி, முஷடாப், கோபால் நகர், ஜனமுகுத்தா, லேக்ரா & குத்கோல் ஆகிய கிராமங்களில் ஆவிக்குரிய எழுப்புதல் பெறவும், அநேகர் விசுவாச வாழ்விற்குள் வரவும் ஜெபிப்போம்.

## 21 அக்டோபர்
சனி

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** 15 புதிய கிராமங்களில் 700 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டதற்காக; பிரிந்திருந்த சபை மூப்பர் சுன்கு மற்றும் அவரது மனைவி இணைந்து வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்துவதற்காக; விசுவாசத்தில் பின்வாங்கிப் போயிருந்த ஏபிலால் டுடு விசுவாசத்திற்குள் வந்து ஆலய ஆராதனையில் பங்குப் பெறுவதற்காக; சுபிலால் டுடு வலிப்பு நோயிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாக்குவாஹாட் பணித்தள வாலிபர்கள் திருமணத்தின்போது தவறான முடிவுகளை எடுப்பதின் மூலமாக தேவனைவிட்டு விலகி செல்வது தடைசெய்யப்பட, மணிக்பூர் மற்றும் சல் போனா கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற இடம் கிடைக்க; சுனில், பாடிபால், கோபின் மற்றும் விஷ்வநாத் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட; சுவிசேஷத்திற்கு வாசல்கள் அடைக்கப்பட்ட மௌடங்கா பகுலிடங்கா, கோகில் ஜியா, அல்ச்சாரா, பிஜிடங்கா, குருஞ்சா, புக்ரெய்ல், மற்றும் ஹரின்பூர் கிராமங்களில் திறந்த வாசலை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## அஸோம்

### லோக்ரா: பாருட் பிரதாப் மாங்யா & குமாரி பாரதி

**துதிக்க:** டரிகதி ஆலய 3 நாட்கள் உபவாசக் கூடுகையில் 30 விசுவாசிகள் கலந்து கொண்டு விசுவாசத்தில் எழுப்புதல் ஏற்பட்டதற்காக; இரு சக்கர வாகன விபத்தில் ஏற்பட்ட எலும்பு முறிவிலிருந்து ஷியாம் தேவ கிருபையால் அறுவை சிகிச்சை மூலம் சுகம் பெற்றதற்காக; டரிகதி கிராமத்தில் இயேசு திரைப்படத்தை பார்த்த அவிசுவாசிகளுக்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர் மன்ஜாய் பேயிங்கை இழந்து தவிக்கும் குடும்ப அங்கத்தினர்களின் ஆறுதலுக்காக; பகாபாரி, பாமுனிபாம், சாட்லை & பாலிகாயின் ஆகிய கிராம மக்கள் ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நமது ஊழியர் குமாரி பாரதி அவர்களின் சுகபிரசவத் திற்காக ஜெபிப்போம்.

### கோகாமுக்:

### பிரவீன் தாஸ் & மார்கிரெட்

**துதிக்க:** கோச்சுடோலி, செங்கிலிசூட்டி, சோக்கியாசப்போரி கிராமங்களில் நடைபெற்ற 3 நாட்கள் தேசிய உபவாச கூடுகைகள் ஆசீர்வாதமாக அமைந்த தற்காக; ஒப்பான் பங்கின் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தை அறிக்கையிட்டதற்காக; தனித்தாள் ஊழியத்தின் மூலம் சந்திக்கப்பட்ட 17 பேருக்காக; கண் தொற்றினால் பாதிக்கப்பட்ட கிராமத்தினர் ஜெபத்தால் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** இப்பணித்தளத்திற்கு அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர் கிடைக்க; ஜுன்மோனி இயேசுவை ஏற்றுக்கொண்டதி னிமித்தம் அவளின் மாமியார் அவளை வீட்டைவிட்டு வெளியேற்றிய அவர் மனம் மாறி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சுவிசேஷப்பிரதியைப் பெற்ற 225 நபர்களின் உள்ளங்களிலும் ஆவியானவர் கிரியைச் செய்ய; மோகன், உனி மிஷோஸ், ரஜீப் ஆகியோர் குடியின் அடிமைத்தனத்தி லிருந்து விடுதலைப் பெற; ஊழியரின் மனைவி மார்கிரெட் எலும்பு தேய்மானம் மற்றும் சுகவீனமாயிருக்கும் விசுவாசி களும் சுகம் பெற ஜெபிப்போம்.

# 22 அக்டோபர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெபராணி அசரியா ராஜ்குமார்
திருமதி. மரிதாய் லியோனா பிரத்யூஷ்

## சத்தீஸ்கட்

### லக்கன்பூர் & அம்பிகாபூர்:

**அருண் குமார் & சாரதி**

**துதிக்க:** ரத்தியா கிராமத்திலுள்ள விசுவாசியின் குழந்தை சூரியாவிற்கு மரண தருவாயில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த பிள்ளைக்கு தேவன் கொடுத்த ஜீவனுக்காக; 11 வயது ஐசக் மேல் விஷப்பாம்பு ஏறி கடந்தபோது எந்த பாதிப்புமில்லாமல் தேவன் பாதுகாத்ததற்காக; நமது விசுவாசியான அஷோக் ராம் மற்றும் தர்மு ஆகியோர் கரடியிடமிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக; 3 நாட்கள் உபவாச கூடுகையில் 90 பேர் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் ஆசீர்வதிக்கப்பட்டதற்க்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசியின் மகன் ரதாவில் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட; ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கானப் பயிற்சி சிறுவர்களைத் தேவனிடத்தில் கொண்டு சேர்க்க ஏதுவாக அமைய; ஒருநாள் பெண்கள் கூடுகையில் கலந்து கொண்டோர் அர்ப்பணிப்போடு தேவனுக்காக வாழ; சித்தாமுலவில் ஆலயம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு, அக்டோபர் மாதம் பிரதிஷ்டைச் செய்யப்பட; அனைத்து கிராமங்களிலும் வேதாகமப் பயிற்சிக் கூடுகைகள் நடத்தப்பட ஜெபிப்போம்.

### சம்ப்பா:

**வினோத்குமார் சிங் & பிரவதிமணி**

**துதிக்க:** 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; அதில் 200 பேர் நற்செய்தி கேட்டதற்காக; 40 வேதாகமம் விநியோகிக்கப்பட்டதற்காக; அறியப்படாத வியாதியிலிருந்து போதினிக்கு கிடைத்த சுகத்திற்காக; போம்ஹோர் ரோசடா ஆராதனை குழுக்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருவதற்காக; விசுவாசிகள் தாங்களே கிராமங்களைத் தெரிந்தெடுத்து ஜெபிக்கவும், அந்த கிராமங்களில் சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றியும் வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பலிராம் மற்றும் சாந்தியின் சுகத்திற்காக; ஆராதனையில் கலந்துகொள்ளும் முர்லிட் டை பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; கர்ப்பப்பை வலியிலிருந்து நேகா சுகம் பெற; கிராமத்தலைவர் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியினால் மனநிலை பாதிக்கப்பட்ட சாந்தாராம் குடும்பத்தில் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

## யெகோவா மேகன் (கேடயம் / பாதுகாப்பவர்)

*ஹிமாச்சலப் பிரதேசத்திலுள்ள ரோஹ்ரு பணித்தளத்தில் ஒரு கன மழையின் போது, நமது விசுவாசியான கீதா அவருடைய குடும்பத்தில் ஒரு அதிசய நிகழ்வை தேவன் நடத்தினார். கீதாவின் குடும்பத்தினர் அனைவரும் வீட்டிற்குள்ளே இருக்கும்பொழுது கீதாவின் மைத்துனி, ஒரு பெரிய பாறை அவர்களின் வீட்டை நோக்கி ஆபத்தான முறையில் உருண்டு வருவதைக் கண்டார். கீதாவின் மைத்துனி அனைவரையும் வீட்டை விட்டு வெளியே வரும்படி கத்தினார். திடீரென வீட்டை நோக்கி வந்த பாறை அதிசய விதமாய் பயிர்களைச் சேதப்படுத்தி விழுந்தது. இதில் தேவனுடையச் செயல்பாடு தெளிவாகத் தெரிந்தது. கீதாவையும் அவருடைய குடும்பத்தினர் அனைவரின் உயிரையும் காப்பாற்றிய பாதுகாப்பின் தேவன் கேடகமாய் இருந்ததற்காக ஸ்தோத்திரம்!*

## 23 அக்டோபர்
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஜெயந்தி கிரேஸ் ஜெபக்குமார்

### துர்கொண்டல்:
**பாபுஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா**

**துதிக்க:** 40 பேருக்கு முதல் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; ஊழியத்தினிமித்தம் பல கிராமங்களுக்குச் செல்லும்போது ஊழியர்களுக்கு தேவன் கொடுத்த பாதுகாப்பிற்காக; பிரகாஷ்க்கு கிடைத்த சுகத்திற்காக; நமது ஊழியத்திற்கு உதவியாக இருந்து வரும் ரதிராமுக்கு மூச்சு திணறலிலிருந்து தேவன் கொடுத்த விடுதலைக்காக; கலஞ்சர் கிராமத்தில் நடந்த இரவுக் கூடுகையில் கலந்துகொண்ட 5 பேருக்காக, மாதம் 2 முறை நடைபெறும் உபவாசக் கூடுகையில் உண்மையாய் பங்கு பெறுவோருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரகாஷ் கின்டோ இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கலஞ்சர் கிராமத்தில் புதிய ஆராதனை துவங்கப்பட; அமித்பட்டக் குடும்பம் இணைந்து வாழ; சங்கர் மற்றும் அவருடைய குடும்பம் ஆண்டவரை ஏற்றுக்கொள்ள தடையாய் இருக்கும் அவரது சகோதரருக்காக; பக்கஞ்சூர் கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கு கல்லறைத் தோட்டத்தை அரசு வழங்கிட தடையாயிருக்கும் மத அடிப்படை சக்திகள் மனம் மாற ஜெபிப்போம்.

### காட்கோரா:
**வால்வி தினா தானா & ஷைலா**

**துதிக்க:** 8 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு 240 பேர் சுவிசேஷத்தைக் கேட்டதற்காக; மாடு முட்டி எலும்பு முறிவு ஏற்பட்ட ராஜாவுக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக; கோர்டிபி கிராமத்தில் புதிதாக துவங்கப்பட்ட பஜன் நிகழ்ச்சி மூலம் சத்தியத்தை அறிந்துகொண்ட மக்களுக்காக; விஷப்பாம்பிடமிருந்து புட்டிபக்னா விசுவாசியை தேவன் பாதுகாத்துள்ளார். திப்லிக்கு தேவன் கொடுத்த சுகப்பிரசவத்திற்காக; சத்தீஸ்கட் பிராந்திய பயிற்சி ஆசீர்வாதமாக இருந்ததற்காக; மழைக் காலங்களிலும் புருனுஜாரியா ஆற்றை கடந்து ஆராதனையை நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பலவிதமான நோயினால் கஷ்டப்படும் விசுவாசிகளுக்கு தேவ சுகம் கிடைக்க; விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப் போன சந்தோஷ் திரும்பவும் தேவனிடத்தில் வர; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கிராமத்தலைவர் கோபால் மனந்திரும்ப; தீய ஆவியின் பிடியிலிருந்து மனா & மகான்ஸ் குடும்பம் விடுவிக்கப்பட; விசுவாசத்தில் பெலவவீனமாயிருக்கும் பலா பச்சிரா கிராமத்திலுள்ள 3 குடும்பங்களுக்காக; பஞ்சஹட்டா ஆராதனைக் குழுவிலுள்ள விசுவாசிகளுக்கு அசுத்த ஆவியின் தொந்தரவிலிருந்து விடுதலை பெற; காட்கோரா ஆராதனைக்குழுவில் கலந்துகொள்வோர் சாட்சியாய் வாழ ஜெபிப்போம்.

## 24 அக்டோபர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. பியூலா ஜெபக்குமாரி பர்னபாஸ்
திருமதி. சீத்தாமணி கிஸ்கு

## ஒடிசா

### கியோன்ஜர்:

**பிரத்யூஷ் நாயக் &**
**மரிதாய் லியோனா**

**துதிக்க:** தேவன் 10 புதிய கிராமங்களில் திறந்த வாசலை தந்து 981 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; 14 பேர் விசுவாச வாழ்விற்குள் வந்து கிறிஸ்துவின் மந்தையில் இணைந்ததற்காக; மூளை காய்ச்சலினால் அவதியுறும் ஜம்பிக்கு பரிபூரண சுகம் கிடைக்க; குருபாரி முண்டா தீக்காயத்திலிருந்து சுகம் பெற்று வருவதற்காகவும் ஆலய ஆராதனையில் தவறாமல் கலந்து கொள்வதற்காகவும்; பாண்டே ஹெம்ப்ரோம் குடும்பத்தினர் 3 ஆண்டு காலம் குழந்தை இல்லாத சூழ்நிலையில் ஆராதனைக்கு வர ஆரம்பித்தனர், விசுவாசத்திற்குள் வந்ததும் தேவன் அவர்களுக்கு கர்ப் பத்தின் கனியைத் தந்து ஆசீர்வதித்த தற்காக; மமலபோசி ஆலயக்கட்டு மானப்பணி விரைவில் முடிவடைந் துள்ளததற்காக; தீய ஆவியிலிருந்து விடுவிக்கப்பட்ட மானிக் முண்டாவிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹோ சமுதாய மக்கள் அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள; பிசாசின் பிடியில் அகப் பட்டிருக்கும் முகேஷ்சை தேவன் விடுவிக்க; புதிதாக கிறிஸ்துவை ஏற்றுகொண்ட விசுவாசிகள் விசுவாசத்தில் வளரவும், கனிதரும் வாழ்வு வாழ்ந்திடவும்; பார்வை இல்லாத ஹரீஸ் வாழ்வில் தேவ திட்டம் நிறைவேற, அநேக கிராமங்களில் நற்செய்திப்பணி தொடர்ந்து நடந்துவந்தாலும் பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தைக் கேட்ட மக்கள் மனதை அசைக்க ஜெபிப்போம்.

### மோகுல் பஹாடி:

**ஹமுவேல் லிம்மா &**
**ரீட்டாஞ்சலி கரடா**

**துதிக்க:** தல்டி ஆராதனைக் குழுவி லுள்ள மூப்பர் மத்தியில் காணப்பட்ட பிரச்சினை சுமூகமாக முடிந்ததற்காக; விசுவாசத்தினாலே ரஞ்சினிக்கு கிடைத்த சுகத்திற்காக; தேவன் செம்புவிற்கு கொடுத்த பிள்ளை செல்வத்திற்காக; விசுவாசிகள் விவசாயத்தில் ஆசீர்வாதம் பெற்றதற்காக; அநேக விடுதிப் பிள்ளை களுக்கு நமது இயக்கத்தின் மூலமாக கல்வி உதவி தொகை கிடைக்க பெற்றதற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** மனரீதியான பிரச்சினை யிலிருந்து முனியக்குமாரி விடுவிக்கப் பட; நமிதாவின் சுகப்பிரவத்திற்காக; அஜித் அகடி பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; முங்லாடி ஆராதனைக் குழுவிலுள்ள மூப்பர்களின் குடும்பத் தேவைகள் சந்திக்கப்பட; மொகுல் பஹாடி பணித்தளத்திலுள்ள சிறுவர் & வாலிபர்கள் ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் அதிகமாக வளர ஜெபிப்போம்.

## 25 அக்டோபர்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரேமா ராஜதுரை

### ராய்ரங்பூர்:

**குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்**

**துதிக்க:** 300 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளதற்காக; ராமாஹாடி, பலுஜோடி மற்றும் ஜல்குங்ரி கிராமத்திலிருந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் 6 புதிய குடும்பத்தினருக்காக; கடந்த மாதத்தில் 3 இடங்களில் விசுவாசிகளுக்கான முகாம் நடத்தப்பட்டதற்காக; தேவ இரக்கத்தினால் மலோட்டி கிசு & ஜஸ்மின் குடும்பங்கள் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டதற்காக; சோடியம் குறைபாட்டினால் கஷ்டப்பட்ட சோபன் ஹெம்ரோனுக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளும், புதிதாக விசுவாசத்திற்குள் வந்தவர்களும் பகிரங்கமாக விசுவாசத்தை அறிக்கையிட; விசுவாசிகள் முகாமில் கலந்துகொண்டவர்களின் மத்தியில் எழுப்புதல் ஏற்பட; வாலிபர் முகாம் மற்றும் சபை மூப்பர்கள் முகாமில் கலந்துகொள்வோர் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்திட, கோபிநாத்பூர் & டோன்காபானியில் நடந்துகொண்டிருக்கும் முதியோர் கல்வி வெற்றிகரமாக முடிக்கப்பட; டங்காபானி ஆலயப்பிரதிஷ்டை அக்டோபர் 29-ம் தேதி சிறப்பாக நடைபெற; காட்டுயானைகளிடமிருந்து விசுவாசிகளின் நெல் விளைச்சல் சேதமின்றி பாதுகாக்கப்பட; குச்சைபெல் & சுனாமேரா கிராம ஆராதனையில் கலந்துகொள்ளும் விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் இடையேயுள்ள வாக்குவாதம் சுமூகமான முறையில் தீர்க்கப்பட ஜெபிப்போம்.

### ரிமுலி:

**சங்கர் பி. & ஜெலின்**

**துதிக்க:** 23 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 900 பேர் நற்செய்தியை அறிந்துகொண்டனர். 12 பேர் கிறிஸ்துவின் விசுவாசிகளாகி மந்தையில் இணைந்தனர். சுதேச ஊழியர் சுனாராம் மூலமாக ரோருன் தென் பகுதியில் ஆரம்பித்த ஊழியத்திற்காக; இந்த பகுதியிலுள்ள 19 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; ஐம்புரா பகுதியில் நமது சுதேச ஊழியர் திலீப் செல்வம் ஊழியங்களுக்காகவும், 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருப்பதற்காகவும்; ஞாயிறு ஆராதனையில் தவறாமல் கலந்துகொள்ளும் மஜி மிதா குடும்பத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் தங்கள் சொந்தகாரர்களுக்கும் அருகாமையில் இருப்போருக்கும் சுவிசேஷத்தை தைரியமாய் பிரசிங்கிக்க தேவ ஞானம் கிடைக்க; விசுவாசிகளான போகால்; ஜீம்பானி, சுக்ரா & சோம்பரதி தொடர்ந்து ஜெபக்கூடுகையிலும் ஆலய ஆராதனையிலும் கலந்துகொள்ள; ஜமிரா கிராம மக்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ஓராண்டு வேதாகமம் படிக்கும் திட்டம் மூலம் வேதத்தை கிரமமாக வாசிக்கவும், வாசிக்கும் ஆர்வத்தை தேவன் கொடுக்கவும் ஜெபிப்போம்.

# 26 அக்டோபர்
வியாழன்

## குஜராத்

### அஹ்வா:

### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்

**துதிக்க:** 186 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஒரு ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. 5 வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டன. தாத்ரா, குத்காஸ் சிசினகோண்டா மற்றும் கதம்பா ஆகிய இடங்களில் வாலிபர்களுக்கானக் கூடுகைகள் நடத்தப்பட்டன. சுந்தா மற்றும் குக்குத்ரா ஆகிய இடங்களில் இரு நாட்களாக சிறப்பு உபவாச ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. 13 கிராமங்களில் ஒருநாள் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. உத்மால் கிராமத்தில் இரவுக்கூடுகை ஆரம்பிக்கப்பட்டது. சிம்மன்பாய்,பிரேமிளா ஆகியோர் அசுத்த ஆவியின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர். பெண்கள் உடல் சார்ந்தப் பிரச்சினையிலிருந்து சுந்தா சுகம் பெற்றார். மோஹ்ரா மற்றும் சாய்மால் கிராமங்களில் தற்காலிக குடிசை ஆலயம் கட்டப்பட்டு, தற்சமயம் ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிற்றுக்கிழமை முதல் செவ்வாய் வரை தங்கள் குருக்களான அஷிமானந்த் மற்றும் P.P. சிங் ஆகியோரைச் சந்திக்க தொலைவிலிருந்து வரும் மக்கள் உண்மையான இறைவனைக் கண்டுகொள்ள; சபரிதம் கிராமத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ எதிர்ப்பாளரான சுபேந்தபாய் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இருவர் என்று 100 நபர்களை கிறிஸ்தவத்திற்கு எதிராக உருவாக்கியுள்ள இவர் மனந்திரும்பி கர்த்தரை ஏற்றுக்கொள்ள; குக்குத்ரா பகுதியில் 35 மந்திரவாதிகள் இருப்பதால் நற்செய்தியை அறிவிக்க தடை ஏற்பட்டுள்ள நிலையில், மந்திரவாதிகள் மனம் மாற; ஜெயராம் டேனியல் மீனா, குலாப், தீபக் ஜெயேஷ், சுனில், நாது, மீரா, சுரேஷ் மற்றும் நமது குடும்பங்கள் மழலைச் செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; அமிஷா யசோதா, பாபிபேன் சரளாபேன் மற்றும் சுந்தா ஆகியோரின் பெண்ணியல் உடல் சார்ந்தப் பிரச்சினைகளிலிருந்து சுகம் பெற; அசுத்த ஆவியால் பாதிக்கப்பட்டு கட்டுப்படுத்த முடியாமல் சங்கிலியால் கட்டிவைக்கப்பட்டிருக்கும் 20 வயதான கமிலாபேன் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### பெயிண்ட்:

### பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா

**துதிக்க:** சபை மூப்பர்கள் பயிற்சி 3 இடங்களில் நடைபெற்றதற்காக, அதில் 150 சபை மூப்பர்கள் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் எழுப்புதல் பெற்று தேவனுக்காக பணிசெய்ய அர்ப்பணித்ததற்காக; 150 பேர் விசுவாசத்தை பகிரங்கமாக அறிக்கையிட்டுள்ளனர். 2 கிராமங்களில் ஆலயம் கட்ட நன்கொடையாக நிலம் கொடுக்கப்பட்டுள்ளதற்காக; அடிக்கடி தன் சுயநினைவை இழந்துபோகும் ரூடனாபேன் மகனுக்கு தேவன் கொடுத்த விடுதலைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாலிபேன், திவ்யாபேன், சானிபேன் மற்றும் ரவித்பேன் ஆகியோருக்கு இருக்கும் பல்வேறு வியாதிகளிலிருந்து தேவன் பரிபூரண சுகத்தை தரவும், அவர்களனைவரும் விசுவாசத்திற்குள் வளரவும்; 4 முறை கருக் கலைந்த கரஞ்சாபேன் மறுபடியும் கருவுற்றிருக்கிற மகளுக்கு தேவையான பாதுகாப்பான மகப்பேறுவைப் பெற்றெடுக்க; அநேக வாலிபர்கள் படிப்பை 10-ம் வகுப்பில் அல்லது 12-ம் வகுப்பில் தொடராமல் விட்டுவிடாதிருக்க; குழந்தைத் திருமணம் தடைசெய்யப்படவும், 18 வயதுக்கு மேல் திருமணம் நடத்தும் பழக்கத்திற்குள் வர மற்றும் விவாகரத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

## 27 அக்டோபர்
வெள்ளி

### அக்கல்குவா:
**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** 3 புதிய கிராமங்களில் 400 பேர் சத்திய சுவிசேஷத்தை அறிந்து கொண்டனர். ரானாப்பூர் கிராமத்தில் புதிய ஜெபக்குழுத் துவங்கப்பட்டதற்காக; பெண் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய பெண்கள் கூடுகை நடத்தப்பட்டதற்காக; முதுகர்தடா சிறு நீரகக்கல் பிரச்சினையிலிருந்து சுகம் பெற்றதற்காக; 8 புதிய குடும்பங்கள் ஆலய ஆராதனைகளில் கலந்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விவேக் மற்றும் நிர்மலா குடும்பத்தினருக்கு தேவன் குழந்தை பாக்கியத்தை தர, பில்லிசூனியக் கட்டினாலும் சாபத்தினாலும் கட்டப்பட்டு இருக்கிற விக்ரம் குடும்பம் விடுவிக்கப் பட; ஆலய ஆராதனையில் கலந்து கொள்வோர் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவும் விசுவாசத்தை அறிக்கை யிடவும், முரம்பா மற்றும் பத்திப்பாடா ஆலய ஆவணங்கள் தடையின்றி விரைவில் கிடைக்கப்பெற; எதிர்ப்பினி மித்தம் தடைப்பட்டு இருக்கிற மொரக்கி கிராம ஜெபக்குழுக்கள் தொடர்ந்து நடைபெறவும், விசுவாசத்தில் பலப்படவும்; தலைமைத்துவப் பயிற்சி நடத்தப்படும் நோக்கம் வெற்றிகரமாக நிறைவேற ஜெபிப்போம்.

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** 2 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதை வாஞ்சையோடுக் கேட்ட 199 பேருக்காகவும், அதில் 2 பேர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காகவும்; லால் சிங்பாடா கிராமத்தில் புதிதாக துவங்கப்பட்ட இரண்டு ஆராதனைக் குழுக்களுக்காக; எகனுப்பாடா, பணக்காட், வன்காட் மற்றும் விக்ரான் கிராமங்களில் வெளிப்புற ஊழியங்கள் நடத்தப்பட்டதற்காகவும், அதன் மூலமாய் 124 பேர் சுவிசேஷத்தைக் கேட்டதற்காகவும்; இரண்டு கிராமங்களில் நடத்தப்பட்ட ஆத்துமா ஆதாயப்பணியில் கிடைக்கப்பெற்ற 32 ஆத்துமாக்களுக்காக; சிறுவர் கூடுகையில் 32 சிறார்கள் கலந்துகொண்டதற்காக; விசுவாசி திலீப்பை 2 சக்கர வாகனவிபத்திலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உமர்பாடா கிராம ஆலயக்கட்டு மானப்பணி விரைவில் நிறைவு பெற; பிசாசின் பிடியிலிருந்து புஜாரிபாய் விடுபட; குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் வைசாலி, டிக்கியா மற்றும் ஆர்த்தி குடும்பத்திற்காக; சிறுநீரகப் பிரச்சினை, இரத்த அணுக்கள் வியாதி, மனநிலை மற்றும் முடக்கு வாதத்தினால் துன்புறும் மக்களுக்கு தேவன் சுகத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.

### *கரிசனையுள்ள கர்த்தர்!*

*ஹிமாச்சலப் பிரதேசம், ரோஹ்ரு பணித்தளத் திலுள்ள நமது தன்னார்வலர்களில் ஒருவரான ஷெர்சிங் ஜுலை 9-ம் தேதி ஞாயிறு ஆராதனை நடத்துவதற்காக ட்யூனிக்கு போகும்பொழுது பலத்த மழைப் பெய்தது. ஷெர்சிங் ஊழியத்தை முடித்து வீடு திரும்பும் போது வாகன வசதியும், பாதுகாப்பான சாலையும் இல்லாத போதும் தனது வீட்டைச் சென்றடையப் பாதுகாப்பான ஒரு வாகனத்தைக் கண்டுப்பிடித்து வீடு திரும்பிய சில நேரங்களில் மழை அதிகரித்தது, அனைத்து இணைப்புகளும், போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. ஊழியர் மேல் கரிசனையுள்ள தேவன் அவரைப் பத்திரமாய் வீடு வந்து சேரச்செய்த தேவகிருபைக்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்!*

# 28 அக்டோபர்
சனி

## மொல்கி / நர்மதா:
**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** பாவ்திபாடா கிராமத்தில் நடைபெற்ற பஜன் கூடுகை மூலமாக 60 பேர் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டறிந்தனர். 16 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். 20 இடங்களில் சிறுவர்களுக்கான கூடுகைகள் நடைபெற்றது. டெபார்மோல் கிராமத்தில் ஒரு ஆராதனைக்குழு துவங்கப்பட்டதற்காக; போரிப்பாடா கிராம விசுவாசியை பாம்பு கடியிலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை பகிரங்கமாய் அறிக்கையிட்ட விசுவாசிகளின் விசுவாசத்திற்காக; வேலைக்குச் சென்ற ரூபா காணாமல் போனாள், இருக்குமிடம் கண்டுபிடிக்கப்பட; ரமேஷ் மற்றும் போண்டா காச நோயிலிருந்து பரிபூரண சுகமடைய; சுவிசேஷத்திற்கு எதிர்ப்புக் காட்டும் புல்ஜி குல்ஜி விசுவாச வாழ்வை ருசி பார்க்கவும் தேவ அன்பினால் தொடப்படவும் ஜெபிப்போம்.

## தர்ணி:
**ஏகலைவன் ஜேம்ஸ் & பெரில்**

**துதிக்க:** கடந்த மாதம் முழுவதும் எந்த தடையுமில்லாமல் ஊழியம் நடந்ததற்காக; 4 பேர் தேவனை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தை பகிரங்கமாக அறிக்கையிட்டுள்ளதற்காக; ஆவிக்குரிய கூடுகையில் 30 பேர் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றதற்காக; தேவன் திறந்த வாசலை 3 புதிய கிராமங்களில் கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொர்க்கு மக்கள் மத்தியில் வாஞ்சைக் காட்டிவருவோர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்திட; இவர்கள் மத்தியில் ஊழியம் செய்யும் சுதேச ஊழியர்களுக்காக; ஆலய ஆராதனையில் அநேக ஆண்கள் கலந்துகொள்ளவும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; கிக்குடி கிராமத்தில் ஒரு சிறிய ஆலயமும், தக்கர்மால் கிராமத்தில் ஒரு பெரிய ஆலயமும் கட்டப்பட ஜெபிப்போம்.

## சோப்டா & சாங்வி விடுதி:
**வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்**

**துதிக்க:** 4 கிராமங்களில் 145 மக்களுக்கு முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 28 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. 5 கிராமங்களில் வெளிப்புற ஊழியம் நிறைவேற்றப்பட்டு, திரைப்பட ஊழியமும், வேதாகம வகுப்புகளும் நடைபெற்றன. நமது புதிய விசுவாசி விஷாலின் காதில் ஒரு பெண் பாடுவது போன்ற உணர்வு இருந்தது; அவரது வாயிலிருந்து உரோமம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. ஜெபத்திற்குப் பின்னர் இந்தப்பிரச்சினைகள் நீங்கி, இப்போது நன்றாக தூங்குகின்றார். விடுதி சமையல் பெண்ணின் வயிற்றிலுள்ள குழந்தை இரு நாட்களாக இறந்திருந்த நிலையிலும், கர்த்தர் தாயின் உயிரைப் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவர்கள் தங்கள் பாடங்களில் சிறந்து விளங்க; சிறுவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும் ஆரோக்கியமாக இருக்கவும் ஜெபிப்போம்.

# 29 அக்டோபர்
ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ஹட்நெயில்ஹிங் தல்சாகம்

## கர்நாடகா

### கௌரிபித்தனூர் & மதுகிரி:
**ஃப்ரான்சிஸ் துரைசாமி & ஜெயந்தி**

**துதிக்க:** நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களில் 250 நபர்களுக்கு சுவிசேஷம் சென்றடைந்தற்காக; 2 பேர் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டுள்ளனர். நிசி நல்ல மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்றுள்ளதற்காக; பைச்சாபூரா மற்றும் மதுகிரி கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் கிடைத்திருப்பதற்காக; பெண்களுக்கான பயிற்சிக் கூடுகை கௌரிபித்தனூர் திருச்சபையில் நடைபெற்றதால் அநேகர் கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் புதுப்பித்து கொண்டதற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** லட்சுமிதேவம்மா கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; விசுவாசத்திற்குள் வந்ததினால் வீடு காலிபண்ண கட்டாயப்படுத்துவோருக்காக, தேவன் தாமே தேவைகளைச் சந்திக்க; விசுவாச வாழ்விற்கு வந்ததற்காக வீட்டிலிருப்போர் காட்டும் எதிர்ப்பு மறைய, தேவனுக்குள் பெலப்பட; தனது அம்மாவை இழந்திருக்கும் அரிசினி, ஐஸ்வர்யா மற்றும் சுவேதாவுக்கு தேவன் தாமே ஆறுதல் தர; ரத்தினம்மா விசுவாசத்தில் வளரவும் கிறிஸ்துவை அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

## தெலங்கானா

### அடிலாபாத் :
**சந்தியா நாயக் & ரத்தினம்மா**

**துதிக்க:** மூன்று கிராமங்களில் 45 பேருக்கு சுவிசேஷம் சென்றடைந்ததற்காக; 5 பேர் விசுவாசிகளாக மாறி தேவனுடைய மந்தையில் இணைந்தனர். நல்ல மழையினால் நமது விசுவாசிகள் நல்ல விளைச்சலைப் பெற்றதற்காக; புல்லாரா கிராமத்தில் எந்த இடையூறுமின்றி அநேகர் நற்செய்தியைக் கேட்டதற்காக; நமது விசுவாசி ராமாராவ் மிகவும் பணத்தேவையில் இருக்குபோது அரசு 1 லட்சம் உதவிதொகை ஜெபத்தினால் கிடைக்க பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெயினூர் பகுதியில் ஒரு இளம் விசுவாசி எதிர்பாராத விதமாக மரித்துப் போனதினிமித்தம் சுவிசேஷத்தை அறிவிக்க தடைசெய்யும் கிராம மக்கள் மத்தியில் தேவனின் தலையிடுதலுக்காக; ஜாதிப் பிரச்சினையால் பிரிந்திருக்கும் இந்திராவேலி திருச்சபைக்காகவும் விசுவாசிகள் மத்தியில் பிரிவினை நீக்கப்படவும்; சந்தியா நாயக் நமது ஊழியரின் மூத்தமகன் மூளைக்கட்டியிலிருந்து சுகம் பெறவும் மற்றும் இளைய மகனுக்கு நல்ல வேலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

## 30 அக்டோபர்
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. எஸ்தர் G.

# ஆந்திரப் பிரதேசம்

## பலமநேர்:

**பால் குப்புசாமி & ஷைலா**

**துதிக்க:** கொலமாசனப்பள்ளி கிராம ஆலயத்தில் இளைஞர்களுக்கென பயிற்சிக் கூடுகை நடத்தப்பட்டுள்ளது. கல்லப்பள்ளி மற்றும் அப்பினபப்பள்ளி ஆலயங்களில் முழு இரவு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. 13 கிராமங்களில் வீடுசந்திப்பு மேற்கொள்ளப்பட்டது. 4 கிராமங்களில் விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்தோர் சந்திக்கப்பட்டனர். பவனின் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, கிறிஸ்தவ முறைப்படி திருமணத்தை நடத்த பெண் வீட்டார் ஒப்புக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பசவராஜகண்டிகை ஆராதனையில் பலர் பங்கேற்க; வலிப்பு நோயிலிருந்து ரெட்டிஸ்ரீ குணமடைய; தனஞ்செய் மற்றும் அவரது குடும்பத்தினர் கர்த்தரை ஏற்றுக்கொள்ள; தங்களது கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கவும் வெளிப்புற ஊழியம் நடத்தவும் எதிர்ப்பு தெரிவிக்கும் பெலுபள்ளி கிராமத்தினர் மனந்திரும்ப; சில லட்சம் ரூபாயைக் கடனாகக் கொடுத்துள்ள ராமச்சந்துரு, பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள; இரத்த அழிவுச் சோகை (தலசீமியா) நோயினால் அவதிப்படும் ஹெப்சிபாவிற்கு தேவன் சுகம் தர ஜெபிப்போம்.

## தாமலச்செருவு:

**ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி, அனில் மஹாலி & பிரசாந்தி**

**துதிக்க:** 16 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக; புதிய ஏற்பாடு புத்தகங்களும், கைப்பிரதிகளும் விநியோகிக்கப்பட்டதற்காக; தலைமைத் துவப்பயிற்சி நடத்தப்பட்டதற்காக; பாட்டூர் ஆலயத்தில் வைத்து வாலிபர்களுக் கென்று பிரத்தியேக கூட்டம் நடத்தப் பட்டதில் அநேக வாலிபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். ராமாபுரம் ஆலயத்தில் வைத்து பெண்கள் கூடுகை நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன் விசுவாசத்தை அறிக்கையிட காத்துக்கொண்டிருக்கும் 24 பேர் எந்த இடையூறுமின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; நிலப்பிரச்சினையைச் சந்திக்கும் அமராவதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட; பலவிதமான வியாதியினால் அவதிப்படும் வெங்கட் ரமணா, வெங்கட லக்சுமி, ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லா கிருஷ்ணயாவிற்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## சூளூர்பேட்டை:

**ஸ்டீபன் ஜெயசீலன்**

**துதிக்க:** கம்மாகன்டிகா மற்றும் புரதமடுகு பகுதிகளில் ஞாயிறு ஆராதனை நடைபெற்றது. பின்தொடர் ஊழியம் மற்றும் தேடுவோர் முகாம்கள் நடத்தப்பட்டதற்காக; 2 இடங்களில் சிறுவர் வகுப்புகள் நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுப்ரமணி மற்றும் ரமணாம்மா குடும்பத்தினர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; விசுவாசத்தில் பின்வாங்கியிருப்போர் மறுபடியுமாக இயேசுவண்டை வர; கோபால் மூளையிலுள்ள பிரச்சினையிலிருந்தும், வெங்கடா சாமி பக்கவாதத்திலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## 31 அக்டோபர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. சுச்சானோ யந்தன் த்சாங்சே சங்தம்

### சில்லமத்தூர்:
**பால் ரவிராஜ் & ஹேமலதா**

**துதிக்க:** 468 பேர் சுவிசேஷத்தை அறிந்ததற்காக; 20 புதிய ஏற்பாடுகளும் 2 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டதற்காக; கொடிகொண்டா ஆலயத்தில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 78 வாலிபர்கள் கலந்துகொண்டதற்காக; 1 செண்ட் நிலம் ரூ.3-4 இலட்சம் மதிப்பிலிருக்கும்போது 3 செண்ட் நிலத்தை முரளி மோகன் என்ற கிராமத்தலைவரும் அவரின் குழுவினரும் இணைந்து கொடூரு என்ற கிராமத்தில் ஆலயம் கட்ட நன்கொடையாகக் கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிருஷ்ணவேணி, ஸ்ரீராமப்பா, ராமானுஜ, வெங்கடேசப்பா, மற்றும் மகேஷ் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சோமகாட்டா மற்றும் புடுலி கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

### சி.கே. பள்ளி:
**கென்னத் கரியப்பா & கீதா**

**துதிக்க:** 795 நபர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளதற்காக; 1 வேதாகமமும் 39 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டதற்காக; 4 கிராமங்களில் பின்தொடர்பணி நடத்தப்பட்டதற்காக; சபை மூப்பர்கள் மற்றும் இரவுநேர கூடுகைகள் நடத்தப்பட்டதற்காக; புற்றுநோயிலிருந்து பத்மாவதிக்கு சுகம் கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 8 கிராமங்களில் சுவிசேஷத்திற்குத் திறந்த வாசல் கிடைக்க; எல்லா கிராமங்களிலும் ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட; அனைத்து சபை மூப்பர்களும் ஆவிக்குரிய வளர்ச்சியடைய ஜெபிப்போம்.

## தமிழ்நாடு
### இளம்பிள்ளை: செல்வகுமார் R.
**வில்சன் & ஜெயா ஹெலன் ரோஸ்**

**துதிக்க:** மனாகாரடு மற்றும் பணகாரடு கிராமங்களில் சுவிசேஷத்தை வாஞ்சையோடு ஏற்றுக்கொண்டோருக்காக; மூல வியாதியிலிருந்து சுகம் பெற்ற ஜோசப்பிற்காக; சொந்த இடத்தில் அரசு வேலைக் கிடைத்த பரணிதரனுக்காக; ராஜ்குமார் வெற்றிகரமாக தேர்வினை எழுதிமுடிக்க தேவன் உதவியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சீனிவாசனுக்கு நல்ல வேலைக் கிடைக்க; அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விஷ்வந்தன் விடுவிக்கப்பட, ராமசாமி, பழனியம்மாள், நிலா, விஜயா மற்றும் ஜோதி ஆகியோரின் இரட்சிப்பிற்காக; இளம்பிள்ளை ஆலயத்தில் இருக்கும் தண்ணீர் பிரச்சினைத் தீர; விசுவாசத்தில் பின்வாங்கியிருக்கும் குமார் மற்றும் 4 பிள்ளைகளும் விசுவாச வாழ்விற்குள் ஆண்டவரிடம் திரும்பி வர; தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாகிய மனகாரடு, பணகாரடு, மற்றும் பக்கிரிகாடை ஆகிய கிராம மக்கள் அனைவரும் விசுவாச வாழ்வில் வளர ஜெபிப்போம்.

### வார்லி மொழிபெயர்ப்புப்பணி:
**ஆபிரகாம் ஜி. & ஹேமலதா**

**துதிக்க:** வார்லி மொழியில் மொழியாக்கம் செய்து வெளிவந்த 62 புத்தகங்களுக்காக; மொழிப்பெயர்ப்பு செய்து, டைப் செய்து, அதை சரிபார்த்து ஆலோசகரின் சரிபார்த்தலும் முடிந்த நிலையிலுள்ள பக்கங்களுக்காக; புதிதாக ஊழியத்தில் இணைந்து பயிற்சி பெற்றுக்கொண்டிருப்போருக்கு மானுடவியல் பாடம் கற்பிக்க தேவன் உதவியதற்காக; பொன்னியமன்மேடு, சத்துக்காடு மற்றும் பூண்டியில் நடந்த கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியர் மற்றும் மொழிப்பெயர்ப்பில் உதவிவரும் மாதுபாய் ஆகியோரின் ஆரோக்கியத்திற்காக; முக்கிய விதிமுறைகள், விரிவான சரிபார்த்தல் சிறந்த முறையில் நடந்து முடிய; வார்லி விவசாயிகளுக்கு இவ்வாண்டு நல்ல விளைச்சல் கிடைக்க ஜெபிப்போம்.

388 மிஷனரி ஆல்பம்



# திரு. வசாவே எலேஷ் பிரபு & திருமதி. வசாவே சுனிதா வெச்யா குடும்பம்

திரு. வசாவே எலேஷ் பிரபு பிப்ரவரி 15, 1985 அன்று, மகாராஷ்டிராவின் நந்தூர்பார் மாவட்டத்திலுள்ள நவகோனில் திரு. வசாவே பிரபு போகா மற்றும் திருமதி. வசாவே சுக்மா பிரபு ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். திரு. எலேஷின் பெற்றோர்கள் 1980-ம் ஆண்டில் வசாவா மக்கள் கூட்டத்திற்கு முன்னோடி மிஷனரி அருட்திரு. விக்டர் முருகேசனின் ஊழியத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இது அவர்களின் இரட்சிப்புக்கு வழிவகுத்தது. இவர் 1990-ல் வாக்கிபாடாவிலுள்ள FMPB விடுதியில் சேர்க்கப்பட்டார். இவர் ஆவிக்குரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்றாலும், தேவனுடன் இவருக்கு தனிப்பட்ட உறவு இல்லை. இருப்பினும், 1996-ல் அவரது தாத்தாவின் மறைவு “இறந்தவர்கள் எங்கே செல்கிறார்கள்?” என்ற கேள்வியைக் கேட்கத் தூண்டியது. மிஷனரி சகோதரி. மேரி அந்தோணியம்மாள் வேதாகமக் கதைகள் மற்றும் மிஷனரி வாழ்க்கை வரலாறுகளைக் குழந்தைகளுடன் பகிர்ந்துக் கொண்டார். இது எலேஷை பாவமற்ற வாழ்க்கையை விரும்புவதற்கான வழிவகுத்தது. இதைக் குறித்து மேலும் அறிந்திட வேதத்தை ஆராய இவரைத் தூண்டியது. விடுதி காப்பாளர்களும் குழந்தைகளைக் கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தினர். ஜனவரி 27 அன்று, “இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பு” மற்றும் அதற்குப் பின்பு உள்ள வாழ்க்கையைப் பற்றி அப்போஸ்தலர் 4:12 அடிப்படையிலானப் பிரசங்கத்தின் போது, எலேஷ் இரட்சிப்பின் உறுதியைப் பெற்றார். இவர் பிப்ரவரி மாதம் 2001-ல் விடுதி வாலிபர்களுக்காக FMPB-ன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் கருத்தரங்கில் கலந்துகொண்டார். அங்கு இவர் மிஷனரி வாழ்க்கை வரலாறுகள் மற்றும் ஊழிய அழைப்பு ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டார். ஏசாயா 6:8-ல் உள்ள ஏசாயாவின் அழைப்பைப்போல ஜெபத்தின் போது, முழுநேர ஊழியத்திற்கான தேவ அழைப்புக்கு இவர் தன்னை அர்ப்பணித்தார்.

திருமதி. சுனிதா, மகாராஷ்டிரா மாநிலம். நந்தூர்பார் மாவட்டத்திலுள்ள நவபாடாவில் திரு. வசாவே வெச்சியா மற்றும் திருமதி. வசாவே காசு ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். இவர் நவாப்பூரிலுள்ள டீன் டிரஸ்ட் மினிஸ்ட்ரீஸ் ஆலயத்தில் ஆவிக்குரிய உறுப்பினராக இருந்தார். இளைஞர் நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மீக நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார். 2002-ல் இவர் காரஞ்சி புத்ருக்கில் நடந்த இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டார். அங்கு இவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடையப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்தார். மகாராஷ்டிராவின் யெவத்மாலில் உள்ள வேதாகமக் கல்லூரியில் சேரத் திட்டமிட்டிருந்தார். இவரும் இவருடைய தாயும் மட்டுமே விசுவாசிகளாக இருந்ததால், அவர்களுடைய தந்தை மற்றும் சகோதரர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பை எதிர்கொண்டார். தேவனின் வழிகாட்டுதலை நம்பி, இவர் தனது எதிர்காலத்தை அவர் கைகளில் விட்டுவிட்டார். அவர் காட்டும் எந்தப் பகுதியிலும் பணியாற்றத் தயாராக இருந்தார். திரு. எலேஷ் மற்றும் திருமதி. சுனிதா ஆகியோரின் திருமணம் ஏப்ரல் 5, 2005-அன்று நடைப்பெற்றது. அறியப்படாதவர்கள் மத்தியில் இயேசுவை அறிவித்திட ஆர்வத்தைப் பகிர்ந்துக்கொண்டு, அவர்கள் ஒன்றாக ஊழியப் பயணத்தைத் தொடங்க முடிவுச் செய்தனர். 2008-ம் ஆண்டில், ஒரு குடும்பமாக, அவர்கள் FMPB உடன் நேர்காணல்களை மேற்கொண்டனர். பின்னர் BBI மற்றும் NIM-ல் பயிற்சி பெற்றனர். அதைத் தொடர்ந்து பலார்ஷா பகுதியின் லகாட்கோட் கிராமத்தில் மூன்று மாதங்கள் ஊழியம் செய்தனர். பின்னர் அவர்கள் ஜம்முவிலுள்ள நவ்ஷெரா என்ற பணித்தளத்திலுள்ள ராஜ்புத், ராம்தாஷி மற்றும் மஹ்சா மக்கள் இனங்கள் மத்தியில் 7 ஆண்டுகள் ஊழியம் செய்ய பாஷோலிக்கு இடம் பெயர்ந்தனர். எலேஷ் ஜம்மு பிராந்தியத்திற்கான பிராந்தியச் செயலாளராக உள்ளார். கடந்த 5 ஆண்டுகளாக, அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

இவர்களின் குடும்பம் இரண்டு மகன்களுடன் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 14, 2014-ல் பிறந்த ஆரத்யா தற்போது டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவில் மூன்றாம் வகுப்பு படித்து வருகிறார். மே 31, 2021-ல் பிறந்த இவான் இவர்களின் இளைய மகன். இந்தக் குடும்பத்தை நமது ஜெபத்தில் நினைவுக் கூருவோம்.

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:** காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

# நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***